29th October 2023

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 03 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com



09 >>

அவசரக் கோளாறு



# ஐ.நா தீர்மானத்தை ஏற்கோம்

# ஹமாஸை அழிக்கும் வரை போரை முன்னெடுப்போம்

காஸாவில் பலத்த சண்டை

இஸ்ரேல் படைகளுக்கு கடும் சேதம்

தெல்அவீவ் மீது தொடர்ச்சியான ரொக்கெட் தாக்குதல்

இஸ்ரேலின் அதிரடி அறிவிப்பால் 3ம் உலகப் போர் மூளும் அபாயம்?

போர் நிறுத்தம் கோரி ஐ.நா. பொதுச் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை நிராகரிக்கிறோம் என இஸ்ரேல் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் போரை நிறுத்தக் கோரி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஜோர்தான் அரசு தீர்மானம் கொண்டுவந்தது.

இந்த தீர்மானத்துக்கு 120 நாடுகள் ஆதரவும், 14 நாடுகள் எதிர்ப்பும் தெரிவித்தன.

03ம் பக்கம் பார்க்க >>>

## ஆட்டம் போடும் அம்பிட்டிய தேரர் வேடிக்கை பார்க்கும் அரசு, காவல்துறை

### அரசியல்வாதிகள், அமைப்புக்கள் காட்டம்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பில் "தமிழனா தம்பிலாவா தலையை வெட்டுவேன்" என்று தறிகெட்டுப் போய் ஆட்டம் போடும் அம்பிட்டிய சுமன ரத்ன

02ம் பக்கம் பார்க்க >>>



## பொன் விழாவினைக் கொண்டாடிய முஸ்லிம் லீக் வாலிப முன்னணி

(அஷ்ரப் ஏ சமத்)

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி சம்மேளனத்தின் 50ஆவது வருட (பொன் விழா) மாநாடு இன்று (29)

12ம் பக்கம் பார்க்க >>>

## இராமேஸ்வரம் மீனவர்களின் விடுதலைக்கு நடவடிக்கை

### இந்திய எம்.பி. நவாஸ் கனியிடம் அலிசப்ரி உறுதி

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

இராமேஸ்வரம் மீனவர்கள் 27 பேரும் விரைவில் விடுதலை செய்யப்படும் என்று இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனியிடம் வெளியுறவுத் துறை அமைச்சர் அலி சப்ரி உறுதி அளித்தார்.



கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் பொன்விழா நிகழ்வும் 50 ஆவது வருடாந்த மாநாடு கொழும்பில் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்வதற்காக இந்தியாவில் இருந்து இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில்

02ம் பக்கம் பார்க்க >>>

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

**ஆட்டம் போடும்....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

தேரோவைக் கண்டவுடன் கூனிக் குறுகி கும்பிடு போட்டு நிற்கும் பொலிஸாரின் காட்சிகளை கடந்த ஒருவார காலமாக ஊடகங்கள் வாயிலாக காணக் கூடியதாக இருக்கிறது.

நடு வீதிக்கு வருகிறார். பொலிஸ ாரின் இரும்புக் கம்பித் தடைகளில் ஏறிக் குந்துகிறார், சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் கர்ஜிக்கிறார், காடுகளுக்குச் செல்கிறார் அங்கும் கூப்பாடு போடுகிறார். பொலிஸ் நிலைங்களுக்குள் செல்கிறார். அங்கே ஒப்பாரி வைத்து அழுகிறார். எங்கு சென்று ஆட்டம் போடும் போதும் சிறுபான்மைச் சமூக மக்களைத் திட்டித் தீர்க்கிறார். சிங்கள மக்கள் வாழ வழியில்லை என்கிறார். சிறுபான்மையினரைக் கொச்சையாகப் பேசி அவர்களை கண்டதுண்டமாக வெட்டுவேன் குத்துவேன் கொலை செய்வேன் என்கிறார்.

ஆனால், இவ்வாறு இனங்களுக்கிடையில் இழிவாகப் பேசி சகவாழ்வைக் குழப்பி அச்சுறுத்தல் விடுக்கும் இந்த காவியுடைக் காரரைக் கண்டதும் காவல்துறை கைகட்டி வாய்பொத்தி கை கூப்பி வணங்கி அடங்கி ஒடுங்கிப் போவது அசிங்கமாக இருக்கிறது.

அம்பிட்டிய சுமண தேரர் அண்மை நாட்களாக இன, சமய ரீதியான வெறுப்பை கிளப்பி சிறுபான்மை மக்களுக்கு எதிராக வன்முறையை தூண்டுவது சம்பந்தமாக பலரும் அதிருப்தியுடன் நோக்குகின்றனர்.

“ஜனாதிபதியைத் தூற்றிய இராஜாங்கன தேரர், போதகர் ஜெரோம் பெர்னாண்டோ, நகைச்சுவை பேச்சாளர் நடாஷா எதிரிசூரிய ஆகியோரை ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் அரசு கைது செய்தது.

ஆனால் தமிழ் மக்களைக் கொல்லுவேன், வெட்டுவேன் என்று பகிரங்கமாகக் கொலைவெறிக் கூச்சல் எழுப்பும் அம்பிட்டிய சுமண ரத்ன தேரரை ஜனாதிபதியின் அரசு கைது செய்யாதா எனக் கேட்க விரும்புகின்றேன்.

எல்லாவற்றையும் கடந்து செல்வதைப்போல் ஜனாதிபதி ரணில் இதையும் கடந்து போக முயற்சிக்கக் கூடாது” – என்றும் மனோ கணேசன் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில், “அம்பிட்டிய சுமண ரத்ன தேரருக்கு தனது தாயின் கல்லறை தொடர்பில், மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் அல்லது மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளருடன் ஏதும் பிரச்சினை இருக்குமாயின், அவை பற்றி அவர் பொலிஸில் புகார் செய்ய வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதைக் கலந்து பேசும்படி மட்டக்களப்பு மாவட்ட செயலாளரைக் கடிதம் மூலம் கோர வேண்டும்.

அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இதை இடம்பெறச் செய்து, பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

இதுதான் சட்டப்படியான நாகரிக நடைமுறை. இதைவிடுத்து சண்டியன் மாதிரியும், மனநோயாளி மாதிரியும் நடுத்தெருவுக்கு வந்து, “தமிழர்களைத் துண்டு துண்டாக வெட்டுவேன், கொல்லுவேன், தெற்கில் வாழும் தமிழரைக் கொல்லுவேன்” என்று ஹிஸ்டீரியா காரனாக கத்துவது எந்த வகையில் நியாயம்? மேலும் தமிழ் ஊடகங்களை அழைத்து, தமிழில் மொழி மாற்றி சொல்லுங்கள் என்றே ஆணவத் திமிருடன் கூறும் இந்தத் தேரரை ஜனாதிபதி கைது செய்ய மாட்டாரா எனக் கேட்க விரும்புகின்றேன்.

அல்லது இவர் ஒரு மனநோயாளி என அங்கொடையில் அடைத்து விடுங்கள். இன்று இந்த அம்பிட்டிய சுமண ரத்ன தேரரின் மட்டக்களப்பு விகாரையை நடத்த இலங்கை இராணுவம் உதவுகின்றது.

நாட்டின் இராணுவம் இவருக்குச் சோறாக்கி சாப்பாடு போடுகின்றது. இவை பற்றிய தகவல்கள் எனக்குக் கிடைத்துள்ளன. மக்களின் வரிப்பணத்தில் சாப்பிடும் இவர் பல ஆண்டுகளாகவே இப்படி துவேசமாகப் பேசி வருகின்றார்.

பொலிஸ் அதிகாரிகளின் கன்னத்தில் அடிக்கின்றார். பொலிஸ் அதிகாரிகளின் சட்டையைப் பிடிக்கின்றார். பொலிஸ் அதிகாரிகளின் தொப்பியைத் தட்டி விடுகின்றார். மாற்று மத போதகர்களின் கன்னத்தில் அடிக்கின்றார்.

அரச அதிகாரிகளைக் கெட்ட வார்த்தைகளில் திட்டுகின்றார். அப்படியானால், இவர் யார்?” – என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது விடயமாக பொலிஸ் மா அதிபருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கடிதம் எழுதியுள்ளார்.

**இராமேஸ்வரம்....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

மாநில துணைத் தலைவரும், இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினருமான கே.நவாஸ் கனி, மாநில யூத் லீக் அமைப்பாளர் பள்ளப்பட்டி முஹம்மது யூனுஸ், ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை கொழும்பிற்கு வந்தார்கள்.

பின்னர் வெளியுறவு துறை அமைச்சர் அலி சப்ரி இல்லத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் மாநில துணைத் தலைவரும், இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினருமான கே.நவாஸ் கனி, தொழில் அதிபர் கீழக்கரை டாக்டர் சதக் அப்துல் காதர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாடு மாநில யூத் லீக் அமைப்பாளர் பள்ளப்பட்டி முஹம்மது யூனுஸ், ஊடகவியலாளர் திருச்சி எம்.கே. ஷ ாகுல் ஹமீது ஆகியோர் சந்தித்து பேசினார்கள்.

இதில் இந்தியாவில் நடக்கும் நிகழ்வுகளை குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ்கனியிடம் அமைச்சர் அலி சப்ரி கேட்டறிந்தார். பாராளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி தனது தொகுதிக்கு உட்பட்ட இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் 27பேர்கள் சிறையில் உள்ளார்கள். அவர்களை விடுதலை செய்ய ஆவணம் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அலி சப்ரிடம் கோரிக்கை வைத்தார். அவரது கோரிக்கையை பரீசலிப்பதாகவும் 27மீனவர்களை விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அதேபோல் மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளையும் சம்பந்தப்பட்ட மீனவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார்.

# ஹஜ் பயணப் பதிவினை இணையம் மூலம் மேற்கொள்ளலாம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

2024ஆம் ஆண்டுக்கான ஹஜ் பயணம் மேற்கொள்ள எண்ணியுள்ளவர்கள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைதளத்திற்குச் சென்று அதில் வினவப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கு அமைவாக தங்கள் பதிவுகளை மேற் கொள்ள முடியும்.

2024ஆம் ஆண்டுக்கான ஹஜ் முகவர்களைத் தேர்வு செய்கின்ற நேர்முகத் தேர்வு எதிர்வரும் நவம்பர் 02,03,04 ஆம் திகதிகளில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

மேற்படி நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்படும் முகவர்களின் விபரங்களை திணைக்களம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டதன் பின்னர், தெரிவு செய்யப்பட்ட ஹஜ் முகவர்களுடன் மாத்திரம் 2024ஆம் ஆண்டுக்கான ஹஜ் பயணம் செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை ஹஜ் குழு ஆகியன கேட்டுக் கொள்கின்றது.

கீழ் கொடுக்கப்பட்டுள்ள திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தள முகவரியூடாக மாத்திரம் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

https://muslimaffairs.info/hajjapplications_24/create






**ஐ.நா....**

**முன்பக்கத் தொடர்ச்சி**

ஐ.நா. பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இஸ்ரேல் நிராகரிக்கிறது என அதன் வெளியுறவுத்துறை அமைச்சர் எலி கோஹெனின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், போர் நிறுத்தம் கோரி ஐ.நா. பொதுச் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இஸ்ரேல் திட்டவட்டமாக நிராகரிக்கிறது.

ஹமாஸ் ஒரு பயங்கரவாத அமைப்பு. நாஜிக்கள், ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் எவ்வாறு அழிக்கப்பட்டார்களோ அவ்வாறே ஹமாஸ் பயங்கரவாதிகளும் அழிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, நேற்று இரவு இஸ்ரேல் மிக பயங்கரமான தாக்குதலை காஸாவில் நடத்தியுள்ளது. குறிப்பாக ஆட்லேரி தாக்குதல்களும் ஒரு நிமிடம் கூட இடைவிடாது மிக பயங்கரமான விமான தாக்குதல்களும் நடத்தியுள்ளது. இஸ்ரேல் காஸாவிற்கான ஏற்கனவே நீர் அதை போன்று உணவு மின்சார தடைகளை விதித்திருந்த நிலையில் தொடர்பாடல் வசதிகளையும் இன்டர்நெட் வசதிகளையும் துண்டித்து மிகப் பயங்கரமான ஆட்லேரி விமான தாக்குதல்களையும் நடத்தியதுடன் மூன்று பகுதிகளின் ஊடாக இஸ்ரேலின் நில ராணுவம் உள்ளே சென்றது. நேற்று இரவு முழுவதும் கடுமையான மோதல் நடைபெற்ற போது ஹமாசினுடைய அல்கச்ச்ம் படையணி மிகவும் மும்முரமாக போராடி இன்று காலை ஆகும் பொழுது மொத்த இஸ்ரேல் படைகளுக்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்தி அவர்களை பழைய நிலைமைக்கு தள்ளியுள்ளனர். அதேபோன்று சுற்றியுள்ள நாடுகளுக்கு குறிப்பாக ஈராக் சிரியா போன்ற நாடுகளில் அமெரிக்க நிலைகள் மீது இஸ்லாமிய எதிர்ப்பு இயக்கம் என்று சொல்லக்கூடிய ஹமாசிக்கு சார்பான ஒரு அமைப்பு தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் அமெரிக்க படைகள் ஈடுபட்டுள்ளதாக பல ஊடகவியலாளர்கள் உறுதி செய்த போதிலும் இதுவரையிலும் அமெரிக்கா அது தொடர்பான எந்தவித கருத்துக்களையும் முன் வைக்கவில்லை. ஆனால் அமெரிக்க படைகள் உடைய 2000 அதிகாரிகள் இஸ்ரேல் ராணுவத்தை வழி நடத்துவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த நிலைமையில் பல நாடுகள் குறிப்பாக நேற்று இரவு தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட போது மேற்கு கரையில் இருந்த மக்கள் இரவோடு இரவாக ஒன்று கூடி பாரிய ஆர்ப்பாட்டம் நடத்திய அதேவேளை மேற்கு கரையில் உள்ள ப்ளூஜெனில் நகர்கள் மீது இஸ்ரேலிய ராணுவம் தன்னுடைய படையை அனுப்பி மிக கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தனர்.என்றாலும் மக்கள் பெருமளவில் ஒன்று கூடி இருப்பதோடு தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடைபெற்று இருக்கின்றது. இதுவே ஜோர்டான் தலைநகர் அம்மானில் இஸ்ரேல் தூ துவர் ஆலயத்தை சுற்றி வளைத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்று முழுதுமாக இஸ்ரேல் காரியாலயத்தை வெளியேற்றுமாறு கூடியிருக்கின்றனர். துருக்கியில் பல அமெரிக்க இஸ்ரேலிய வியாபார நிலையங்கள் கடுமையாக தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இதேபோன்று இன்னும் பல நாடுகளில் மிகவும் சிக்கலான நிலைமை காணப்படுகின்றது. மிக முக்கியமாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ள ஒரு கருத்து மிக முக்கியமானது. தங்களுடன் எகிப்திய ராணுவம் இணைந்து தொழிற்படுவதாகவும் அதேபோன்று இந்திய ராணுவத்தின் பூரணமான ஒத்துழைப்பு தமது தாக்குதலுக்கு கிடைப்பதாக குறிப்பிட்டு இருப்பதோடு யெமனிலிருந்து ஈரான் சார்பாக ஹூதிகள் ஏவிய ஏவுகணை சவுதி அரேபியா இஸ்ரேலுக்கு செல்வதற்கு முன்பு சுட்டு வீழ்த்தி உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. இது அரபு உலகத்தில் சவுதி மீதும் யெமன் மீதும் கடுமையான எதிர்ப்புகளை தோற்றுவித்திருக்கின்றது. ஆனால் இந்த தகவல்கள் குறிப்பாக எகிப்து சவுதி இந்தப் போராட்டத்தில் இஸ்ரேலுக்கு ராணுவ ரீதியாக சார்பாக இருப்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. இந்தப் போராட்டத்தின் போக்கை பார்க்கின்றபோது இந்தப் போராட்டம் தொடர்ந்து காஸாவில் இஸ்ரேல் இருக்குமாக இருந்தால் அல்லது இஸ்ரேலை சுற்றி இந்த தாக்குதல் நடத்திக் கொண்டுகொண்டிருக்குமாக இருந்தால் இது ஒரு மிகப் பயங்கரமான பிராந்திய மோதலாக மாறும் என எதிர்பார்த்தாலும் வட கொரியாவின் ஜனாதிபதி நேற்று இரவு இந்த தாக்குதல் ஆரம்பித்தவுடன் தன்னுடைய படைகளுக்கும் தனது நாட்டு மக்களுக்கும் மூன்றாம் உலக மகா யுத்தத்திற்கு ஆயத்தமாகுமாறு வேண்டுகோள்விடுத்துள்ளார். உண்மையில் இது ஒரு மிகவும் சிக்கலான கால கட்டமாக எங்களுக்கு பார்க்க முடியும். ஏனென்றால் சீனா ஏற்கனவே ஆறு கப்பலையும் அமெரிக்க கப்பல்களையும் அனுப்பி இருக்கின்றது. ஹமாசினுடைய பிரதிநிதிகள் ரஷ்யாவை சென்று பல பேச்சுவார்த்தைகள் நடத்தி இருக்கின்றனர். எனவே இந்த மோதல் மிகவும் ஒரு பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த மோகனாக மாறுவதற்காக வேண்டிய வாய்ப்பு இருக்கின்றது.

இன்று தாக்குதல் கட்டாரின் உடைய அனுசரணையின் ஊடாக ஹமாஸ் தரப்பிற்கும் இஸ்ரேல் தரப்பிற்கும் இடையிலே கைதிகளை பரிமாற்றுவதற்கும் அதே போன்று மனிதாபிமான அடிப்படையில் ஓர் ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை அடையும் நிலையில் தான் இடம்பெற்றது. எனவே இந்த விடயத்தில் துருக்கி கட்டார் போன்று இருதரப்பிற்கும் இடையே சமாதான ரீதியில் தொழிற்படுவதற்கு உடைய சூழலை உருவாக்கும் விதமாக சில நாடுகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.இது இவ்வாறு இருக்கின்ற போது ஈரான் தன்னுடைய தரை,வான்,நிலப்படைகளின் பாரிய ஒத்திகை ஆரம்பித்திருக்கின்றது. இந்த ஓத்திகையின் ஊடாக ஈரான் தான் ஒரு யுத்தத்திற்கு தயாராகின்றதா என்ற கேள்வி பல மட்டங்களில் எழுப்பப்பட்டிருந்தாலும் இதுவரை அது தொடர்பாக அலுவலக ரீதியாக எந்தவித மான அறிவித்தல்களையும் விடுக்கவில்லை.ஆனால் ஈரானுடைய ஆன்மீக தலைவர்கள் தொடர்ந்து காஸ ாவினுள் அநீதங்கள் இழைக்கப்பட்டால் தாங்கள் ஒரு தரப்பாக ஈடுபட வேண்டி வரும் என்பதை எச்சரிக்கை செய்துள்ளார்கள். துருக்கியினுடைய தேசிய கட்சி துருக்கியுனுடைய ஜனாதிபதி அர்து கான் தெளிவாக சொல்லி இருக்கின்றார் நாங்கள் ராணுவ ரீதியாக இதில் தலையிட வேண்டும் என்று.அர்து கான் மிக முக்கியமான பல தீர்மானங்களை எடுத்துள்ளார்.குறிப்பாக அவர் இஸ்ரேலுக்கு செல்லவிருந்த விஜயத்தை ரத்து செய்ததுடன் இஸ்ரேலை மிகவும் கடுமையாக ஒரு பயங்கரவாத நாடு என்று சாடி உள்ளார்.அத்துடன் அர்து கான் அனேகமாக துருக்கி இஸ்ரேல் உடனான தொடர்புகளை துண்டிக்க வேண்டிய வரும் ஒரு நிலைமை உருவாகின்றது.ஏனெனில் துருக்கிய பொது மக்கள் இந்த விடயத்தில் மிகவும் கடினமான ஓர் நிலைப்பாட்டினை எடுத்துள்ளார்கள். குறிப்பாக இஸ்ரேலிட்கு எதிரான பாரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் துருக்கிய பொதுமக்கள் மிகவும் கவனமாக இருக்கிறனர்.

ஒரு பக்கம் எருத்திரியாவில் உள்ள இஸ்ரேலினுடைய முசார்ட் அமைப்பின் உளவு தலைமையகத்தை இலக்கு வைத்து இனம் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தி இருக்கின்றார்கள். இங்கு தாக்குதலின் ஊடாக சொல்லும் மிகப்பெரிய செய்தி அஹமத் தய்யிப் தலைமையில் இயங்கும் அல்கச்சாம் படையணி மொத்தமாக ஒரு மிகப்பெரிய திட்டத்துடன் தான் தாக்கத்தில் ஈடுபட்டு இருக்கின்றது. குறிப்பாக எரித்திரியா போன்ற தூ ர பகுதிகளில் உள்ள ராணுவ இலக்கு ஆப்பிரிக்காவின் உள்ள ஒரு முசாடின் உளவு அமைப்பு நிறுவனத்தை தாக்கி அதன் தலைவரையும் கொலை செய்துள்ளமை இஸ்ரேல் மட்டத்தில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றது. அத்துடன் இஸ்ரேலுடன் இந்த தாக்குதல் நடப்பதற்கு முன்பு இஸ்ரேல் தலைநகர் மீது ஹமாஸ் தொடராக ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

வழமைக்கு மாறாக அனேகமான ஏவுகணைகள் இஸ்ரேலின் தலைநகர் டெல் அவியூவிலும் அஷ்கலான் போன்ற நகர்களில் வெடித்து பல உயிர் சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் மக்கள் காயப்பட்டும் மக்கள் பலியாக்கப்பட்டும் உள்ளனர். குறிப்பாக இஸ்ரேலினுடைய ராணுவ அதிகாரிகள் ஒரு புது வகையான இலத்திரனியல் உபகரணத்தை பயன்படுத்தி தங்களுடைய அயன் டோமை ஹமாஸ் செயல் இழக்க செய்துள்ளதை கண்டறிந்துள்ளதாக தெரிவித்துள்ள நிலையில் இஸ்ரேல் கடுமையான வான் தாக்குதல்களை நடத்துகின்றது. குறிப்பாக இந்த நிலைமையை சொல்லுகின்ற ஒரு கருத்தை பார்க்கின்ற போது மிக முக்கியமான ஒரு விடயத்தை நாங்கள் விளங்கிக் கொள்ள முடியும்.

அதேபோன்று இந்த தாக்குதல் நடவடிக்கைகளை பார்க்கும் போது இஸ்ரேலை பொருத்தமட்டில் இந்த யுத்தத்தில் தோல்வி அடைவது என்பது மொத்தமாக தங்களினுடைய நாட்டினுடைய இருப்பை பாதிக்கின்ற செயற்பாடு ஆகும். ஏனென்றால் இந்த நிலைமையை பார்க்கின்ற பொழுது காஸாவில் இஸ்ரேல் தோல்வியடைந்தால் ஹமாசினுடைய கரம் பலமாக ஓங்குவதுடன் அரபு நாட்டு தலைவர்களுக்கு ஒரு நியாயமான பயம் இருக்கின்றது ஹமாசை தாங்கள் ஆதரிக்காத நிலையில் மக்கள் தங்களுக்கு எதிராக எழுந்து இரண்டாவது அல்லது மூன்றாவது ஒரு அரபு வசந்தம் உருவாகி ஒரு நாட்டினுடைய ஆட்சி அதிகாரங்களுக்கு சவாலாக அமையும் என்ற ஒரு நியாயமான அச்சம் காணப்படுகின்றது. இந்த சூழலில் உலக அளவில் மசகு எண்ணெயின் எரிபொருள் விலை அதிகரித்துள்ள நிலையில் இந்த மோதல் இன்னும் ஒரு வாரத்திற்கு தொடருமாக இருந்தால் அது பிராந்தியத்தில் மாத்திரமல்ல உலகளாவிய ரீதியில் பொருளாதார நெருக்கடியை உருவாக்கி சக்தி நெருக்கடியை உருவாக்கி மிகவும் சிக்கலான ஒரு நிலையை உலகத்தில் உருவாக்குவதற்கு சாத்தியம் இருப்பதாக பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அதேபோன்று இந்த யுத்தத்தில் பல நாடுகள் சம்பந்தப்படுவதற்குரிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றதால் இது அனேகமாக ஓர் உலகளாவிய யுத்தமாகக் கூட மாறலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



இலங்கைக்கானபலஸ்தீன் நாட்டுத் தூதுவர் கௌரவ ஸுஹைர் முஹம்மத் ஹமதுல்லாஹ் ஸைத் அவர்களை AMYS (ஜம்மியதுஷ் ஷபாப்) நிறுவன பணிப்பாளர் எம்.எஸ்.எம். தாஸீம் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஏ.ஜே.எம். வாரித் ஆகியோர் சந்தித்த பொழுது எடுக்கப் பட்ட படம்



இன்ஷா அல்லாஹ்

# புனித உம்றா

NOVEMBER - 2023

R.AAKHIR / J.AWWAL - 1445

வெளிநாடுகளில் தொழில் புரிவோரும் எம்மோடு இணைந்து பயணிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும்

மாஷா அல்லாஹ்

- இன்ஷா அல்லாஹ் இரண்டு ஹரம்களிலும் ஜும்ஆக்கள்.
- இரண்டு ஹரம்களுக்கும் மிக அண்மையில் தங்குமிடம்.
  - மக்கா Taj-Al-Raaqi (3 Star Hotel)
  - மதீனா Amjad-Al-Gharra (3 Star Hotel)
- தாயிப், ஆயிஷா மஸ்ஜித் பயணங்கள் உட்பட மக்கா, மதீனா ஸியரத் etc.
- சிறப்பான உணவு பானங்கள்.
- உலமாக்களின் பூரண வழிகாட்டலுடன் மேலும் பல சேவைகள்.

SPECIAL PACKAGE
375,000/-

10 DAYS

எமது உம்றா குழு இன்ஷா அல்லாஹ்

புறப்படுதல்
08.11.2023 Mid-Night
09th Early Morning
COL - JED

QATAR AIRWAYS

திரும்புதல்
18.11.2023 - 4.30 PM
MAD - COL

முன்னாள் ஆசிரிய ஆலோசகர், கொழும்பு பெரியபள்ளிவாசல் கதீப் மௌலவி எம்.ஏ.எம். இப்ழால் (பாரி) B.A.(Hons) அவர்களின் தலைமையில் இன்ஷா அல்லாஹ் செல்ல இருக்கும் இந்த யாத்திரையில் இணைந்து பதிவு செய்துகொள்ள உடன் அழையுங்கள்:

IFLAL MOULAVI : 077 731 0845(SL) / 00 966 54 804 4113(KSA)
SHIFRI HAJ : 077 755 6200
AL HAJ S. SHAHABDEEN (JP) : 077 311 8778
CHAIRMAN / MANAGING DIRECTOR

IATA Accredited Agent
Air Line Ticketing, Haj & Umra Operators

SKY WORLD TRAVELS (PVT)LTD
F-21, People's Park Complex, Col-12 Tel: 011 2395365

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2023 OCTOBER 29 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு முஸ்லிம் ஹேண்ட் கவனம் செலுத்துமா?

இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலையைப் போக்குவதற்கு அரபு முஸ்லிம் நாடுகள் என்றுமில்லாதளவுக்கு உதவ முன்வந்துள்ளன.

இந்தியா, குவைத், ஈரான், ஐக்கிய அரபு அமீர் இராச்சியம் உட்பட முஸ்லிம் நாடுகள் இலங்கைக்கு பல வகையிலும் பொருளாதார உதவிகளை வழங்கி வருகின்றன.

முஸ்லிம் ஹேன்ட் எனும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்பு இம்மாதம் முதல் அதன் பணிகளை முழு இலங்கையிலும் வியாபிக்கவுள்ளது. இதற்காக கொழும்பிலும் அதன் தலைமையகத்தை சில தினங்களுக்கு முன் திறந்து வைத்துள்ளது.

இதுவரை காலமும் புத்தளத்திலே அதன் அலுவலகம் இயங்கி வந்தது.

அதன் பணிகளை விரிவாக்கவுள்ளதாக முஸ்லிம் ஹேன்டின் தலைவர் பீர் செய்யத் லக்கிஹி ஹுசைனை கொழும்பில் நடைபெற்ற தலைமையகத் திறப்பு விழாவில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

முஸ்லிம் ஹேன்டின் 20 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி அதன் பணியாளர்கள் மற்றும் நம்பிக்கையாளர்களுக்கான 5 நாள் உபாய வழிக் கருத்தரங்கு கொழும்பிலே இடம்பெற்றது. பிரித்தானியாவின் நொட்டிங் ஹாமில் அமைக்கப்பட்ட முஸ்லிம் ஹேன்ட் மனிதநேய அமைப்பாகும். உலகில் எங்கு அவசர நிலைகள் ஏற்பட்டாலும் மனிதாபிமான நிவாரணப்பணிகளில் முதன்மையில் இருக்கும் இந்த அமைப்பு இலங்கையில் அதன் பணிகளை மேற்கொள்வதற்கு முடிவு செய்திருப்பது வரவேற்கத்தக்கது.

கொழும்பில் தலைமையகத் திறப்பு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த வைபவத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்ட போதிலும் அவர் கலந்து கொள்ளாமை குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது. பிரதமர் வராவிட்டாலும் அவரது பிரதிநிதி ஒருவராவது வந்திருக்க வேண்டும். பதிலாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தலைவர்கள் இதுபோன்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் இலங்கைக்கு இதுபோன்ற அமைப்புக்கள் மூலம் கூடுதலான உதவிகளைப்பெற்றுக் கொள்ளலாம். இன்று இலங்கையில் இருக்கின்ற பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இதுபோன்ற அமைப்புகளது உதவிகளை கூடுதலாகப் பெற்றுக் கொள்வதற்கு ஆர்வம் காட்ட வேண்டும்.

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 33 வருடங்களாகின்றன. இந்தமக்களைமீளக்குடியேற்றும்செயற்றிட்டங்கள் இன்னும் முழுமையாக அமுல்படுத்தப்படாதிருக்கின்றது. நாட்டில் இறைமையைப் பாதுகாப்பதற்காக தம் வாழ்விடங்களை விட்டு வெளியேறி இன்னும் அகதிகளாக வாழ்ந்து வரும் மக்களுக்கு உதவுவதற்கு முஸ்லிம் ஹேண்ட் போன்ற அமைப்புக்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் விடயத்தில் விசேட கவனம் செலுத்த வேண்டும். 1990 ஆம் ஆண்டு விடுதலை புலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக கடந்த காலங்களில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் வாக்குறுதிகளை வழங்கிய போதும் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்றே அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்ற வகையில் எதிர்வரும் 13ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ள வரவு - செலவு திட்டத்தில் வடக்கு முஸ்லிம்களின் நிரந்தர மீள் குடியேற்றம் தொடர்பாக திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தேசிய மீலாத் விழாவில் உரையாற்றிய ராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மக்களது மீளக்குடியமர பிரதான பிரச்சினை காணிப் பிரச்சினை என்றும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். 32 வருடங்களுக்கு மேலாக உள்ள பிரச்சனைக்கு ஜனாதிபதியின் தலையீட்டின் மூலம் தீர்வு காண முடியும் என்றும் முஸ்லிம் சமூகம் நம்புகின்றது.

## இவ்வார அரசியல் அரங்கில்

# ரணிலுக்கு பாடம் போதித்த கட்டுக்குட்டி நாமல்



எம்.ஏ.எம். நிலாம்

### மொட்டு தரப்புக்குள் பிளவு?

அமைச்சரவை மாற்ற விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயநலமாக நடந்து கொண்டதாக குற்றம் சுமத்தி இருக்கும் மொட்டுத்தரப்பு எம்.பி. ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொண்டால் அரசு கவிழ்ந்து விடும் என எச்சரித்திருக்கின்றார். மறுபுறத்தில் அதே தரப்பைச் சேர்ந்த எம்.பி. எஸ்.பி.திஸாநாயக்க ஆட்சியைக் கவிழ்க்க நாம் துணை போக மாட்டோம் எனவும் பதவிக்காலம் முடியும் வரை ரணில் தலைமையிலான அரசுடனேயே இருக்கப் போவதாகவும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். இதனால் மொட்டுத்தரப்புக்குள் பிளவு ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

### ஸ்மார்ட் நாடா? ஜில் மார்ட் நாடா?

2048இல் இலங்கையை ஸ்மார்ட் நாடாக மாற்றப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கும் நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்தின் பயணம் நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்று கொண்டிருப்பதாகவும் ரணிலால் ‘ஸ்மார்ட்’ நாட்டுக்குப் பதிலாக 2048க்கு முன்னரே ஜில்மார்ட் நாட்டையே பார்க்க முடியுமெனக் குறிப்பிட்டிருக்கிறார்.

### பொலிஸ்மா அதிபர் நியமனம் ரணில் - மொட்டு போர்க்கொடி

புதிய பொலிஸ் மா அதிபர் விவகாரத்தில் ஜனாதிபதிக்கும் மொட்டுத் தரப்புக்குமிடையே ஏற்பட்டுள்ள பாரிய முரண்பாடு நாட்டில் அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. தேசிய மக்கள் சக்தித் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, சந்தன விக்கிரமரத்தினவுக்கான மூன்று வார சேவை நீடிப்பை ‘ரீ லோட்’ நீடிப்பு என விமர்சித்திருக்கும் நிலையில், மொட்டுத்தரப்பினர் தேசபந்து தென்னக்கோனை நியமிக்க வலியுறுத்தி வருகின்றனர். ரணில் விக்கிரமசிங்கவோ சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தனவை நியமிக்க உத்தேசத்துள்ளார்.

2024 தேர்தலை இலக்கு வைத்தே இரு தரப்பினரும் இந்த முயற்சியில் இறங்கியுள்ளனர். தத்தமக்கு நெருக்கமாகச் செயற்படக்கூடியவரை நியமிப்பதிலேயே இவர்கள் முனைப்புக் காட்டி வருகின்றனர்.இது பெரும் அரசியல் நெருக்கடியை உருவாக்கலாம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

### மொட்டுத்தரப்பு ஆதரவை விலக்கினால்

பாராளுமன்றத்தைக் கலைக்கப் போவதாக ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை

தங்களை மதிக்காமல் ஜனாதிபதி தன்னிச்சையாகச் செயற்படத் தொடங்கினால், அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாக மொட்டுத் தரப்பில் சிலர் கூறிவரும் நிலையில், அரசுக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்துக் கொண்டிருந்தால், பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்குப் போகப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மொட்டுத்தரப்பை எச்சரித்திருக்கின்றார். ஆளும் தரப்புக்குள் எந்த நேரத்திலும் பூகம்பம் வெடிக்கலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### இஸ்ரேல் - ஹமாஸ் விவகாரத்தில் தடம் மாறும் ரணில்

இஸ்ரேல் – ஹமாஸ் போர் மூன்று வாரங்களைக் கடந்து பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நிலையில், உலக நாடுகள் பெரும் கவலையில் மூழ்கியிருக்கும் நிலையில், அப்பாவி ஹமாஸ் மக்களுக்காகப் பிரார்த்தித்தும் கண்டனங்களை வெளிப்படுத்தியும் கொண்டுமிருக்கின்றன. இவ்விவகாரத்தில் பாராளுமன்றத்திலும் ஒருநாள் விவாதம் நடந்தது.

ஆரம்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கு நாடுகளுடன் சேர்ந்து தமது ஆதரவை இஸ்ரேலுக்காகத் தெரிவித்திருந்தார். அமெரிக்காவின் கை பொம்மையாக நடந்து வரும் ரணில் விக்கிரமசிங்க, திடீரென கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். மன்னாரில் நடந்த தேசிய மீலாத் விழாவில் முஸ்லிம்கள் மத்தியில் உரையாற்றும்போது, காஸா, பலஸ்தீன் மக்களுக்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார். தனது பயணப் பாதையில் திடீரென தடம் புரண்டுள்ளமை வரக்கூடிய தேர்தலில் முஸ்லிம் வாக்கு வங்கியை இலக்கு வைத்ததாகவே நோக்கப்படுகின்றது.

### மனிதநேயம் செத்துவிட்டது ரிஷாத் பதியூதீன் சீற்றம்

இஸ்ரேல் தனது காட்டுமிராண்டித்தனத்தைகாஸா மக்கள் மீது காட்டியுள்ளது. மேற்குலகின் பேராதரவோடு தனக்கு அபயமளித்த பலஸ்தீன் மீதே போர் தொடுத்து, அப்பாவி முஸ்லிம்களைக் கொன்று குவிப்பதை அமெரிக்க உட்பட மேற்குலகம் பார்த்துச் சிரிக்கின்றது. மேற்குலகில் இன்று மனித நேயம் மறித்துவிட்டது என முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிஷாத் பதியூதீன் கடுமையாகச் சாடியுள்ளார். வெள்ளிக்கிழமை (20) நடந்த பாராளுமன்ற விவாதத்தின் போதே அவர் தனது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினார். ஏகாதிபத்தியத்திடமிருந்து முஸ்லிம்கள் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது எனவும் தெரிவித்தார்.

### ரணிலுக்கு பாடம் போதித்த கட்டுக்குட்டி நாமல்

இலங்கை அரசியலில் பழம் தின்று கொட்டை போட்டவர் 40 வருடங்களைத் தாண்டிய அரசியல் அனுபவ முதிர்ச்சி கண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 15 வருட அரசியல் அனுபவம் கூட இல்லாத நாமல் ராஜபக்ஷ அரசியல் பாடம் கற்றுக் கொடுக்கும் வகுப்பு நடத்த முயற்சிக்கின்றார். இது ரணிலின் போதாக்காலமா? அல்லது கஷ்டகாலமா? என்றே யோசிக்க வேண்டியுள்ளது.

சில தினங்களுக்கு முன் நாமல் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் அவருக்குப் பாடம் போதிக்கத் தொடங்கியுள்ளார். மைத்திரிபாலவுடனான நல்லாட்சியிலும் ரணில் தன்னிச்சையாகச் செயற்பட்டதைச் சுட்டிக்காட்டியுள்ள நாமல், மொட்டுக் கட்சியின் மூலம் அதிகாரத்துக்கு வந்து அதே பாணியில் நடக்க முற்படுவதாக கண்டித்துள்ளார். கூட்டுப்பொறுப்புடன் செயற்படத் தவறினால் விளைவுகள் விபரீதமாக அமையலாம் எனவும் நாமல் ரணிலை எச்சரித்துள்ளார்.

# இலங்கையின் எழுச்சிக்கு கரம் கொடுத்து உதவுவோம்

## Muslim Hand தலைவர்





இந்த நாடு சுபீட்சமடைவதற்கு நாம் உதவுவதற்கு விரும்புகிறோம். நாடு பலமடைவதற்கு கல்வியே சிறந்த ஆயுதமாகும். இந்த நாட்டுக்கு எதிர்காலத்தில் தேவைப்படும் டாக்டர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள், நிர்வாக உத்தியோகத்தர்களை உருவாக்குவதற்கு நாம் உதவுவோம் என முஸ்லிம் ஹென்டில் சார்பில் உறுதியளிக்கின்றேன் என முஸ்லிம் ஹென்டில் தலைவர் பீர் செய்யத் லக்கிஹி ஹசனைன் தெரிவித்தார்.

முஸ்லிம் ஹென்டிலின் கொழும்பு அலுவலகத் திறப்பு விழாவை முன்னிட்டு கொழும்பு சினமன் ஹோட்டலில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச தொண்டர் ஸ்தாபனமான முஸ்லிம் ஹென்டின் 20ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில், அரசாங்க, எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், தேசிய, சர்வதேச அரச சார்பற்ற இயக்கங்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் தொடர்ந்து பேசிய சர்வதேச அமைப்பின் தலைவர் கூறியதாவது,

1993 ஆம் ஆண்டு பிரித்தானியாவின் நொட்டின் ஹாமில் அமைக்கப்பட்ட எமது அமைப்பு, சர்வதேச மனிதநேய அமைப்பாகும். இந்த அமைப்பு 50க்கும் மேற்பட்ட நாடுகளில் வலையமைப்புகளைக் அமைப்புகளைக் கொண்டது. பிரான்ஸ், தென்னாபிரிக்கா, அமெரிக்கா, துருக்கி மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நிதி திரட்டும் அலுவலகங்களையும் கொண்டது. ஆரம்ப முதல் உலகின் பிரதான அவசர கால நிலைகளின் போது மனிதாபிமான வேலைகளுக்காக நாம் முன்னணியில் இருந்து வருகிறோம்.

இலங்கையில் நாம் இந்நாட்களில் அடுத்த ஐந்து தினங்களுக்கு எமது ஐந்தாண்டு பயண விழாவினை மேற்கொள்கிறோம். பிரித்தானியா, துருக்கி, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், யெமன், சோமாலியா, கம்பியா, பங்களாதேஷ், ஒரிட்டோனியா, செனகன், மாலாவி, மாலி, நைகர் ஆகிய நாடுகளில் பணி புரியும் எமது பணியாளர்கள் மற்றும் நம்பிக்கைகள் இந்த உபாய வழி மீளாய்வினை மேற்கொள்வார்கள்.

இலங்கையில் எமது பணிகள் சுனாமியின் பின் 2004இல் ஆரம்பிக்கப்பட்டது. அலுவலகம் 2008 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. எமது தற்போதைய அலுவலகம் புத்தளத்தில் உள்ளது. கொழும்பு அலுவலகத்தை திறந்து வைக்கும் நாம் 22 மாவட்டங்களில் எமது சேவைகளை வழங்குகிறோம். எமது பாடசாலை புத்தளத்தில் இயங்குகிறது. உள்ளூர் பாடநெறிகளைப் போதிக்கும் ஆங்கில மொழிப் பாடசாலை மிகச் சிறந்த பாடசாலையாகவுள்ளது. நாம் உணவு உதவிகளை வழங்குவதோடு, வாழ்வாதாரத் திட்டங்களையும் சுத்தமான குடிநீர் திட்டங்களையும் வழங்குகிறோம். நிறைந்த இயற்கை வளங்களைக் கொண்ட இந்த அழகான நாட்டில் காடு, ஆறு, கடல், பழவர்க்கங்கள், தேயிலைத் தோட்டங்கள், மாணிக்கக்கல், வாசனைத் திரவியங்களைக் கொண்டதாக உள்ளது. இதனைப் பார்வையிடுமாறு எமது சகாக்களுக்கு அழைப்பு விடுத்தோம். இந்த நாடு பல பாதுகாப்பு மற்றும் பொருளாதார சவால்களை எதிர் கொண்டது. மக்கள் முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் நோக்கும் முறை முறை ஒன்று இருக்கின்றது. இவ்வாறான போதும் நாம் நம்பிக்கை அடிப்படையாகக் கொண்ட இயக்கமாகும். வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகிறோம். எமக்கு சரியான இஸ்லாத்தைக் காண்பிக்க வேண்டும். அது ஸகாத் மற்றும் சரிட்டி அமைப்பை நாம் இன, மத, பால் போன்ற எந்த வேறுபாடும் பார்க்காமல் செயற்படுகிறோம். எமது பாடசாலை மற்றும் திட்டங்கள் மூலம் சகலரும் நன்மை பெறுகிறார்கள்.

சகல இன மாணவர்களும் வந்து படிக்கிறார்கள். பல்வேறு இன ஆசிரியர்களும் எமது பாடசாலைகளில் படிப்பிக்கிறார்கள்.

நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார், எரான் விக்கிரமரத்ன, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், முன்னாள் ஆளுநர் ஆஸாத் சாலி ராஜதந்திரிகள், முஸ்லிம் இயக்க பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். முஸ்லிம் ஹேன்ட் இலங்கை அலுவலகம் கொழும்பு -03, ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் 42/14ஆம் இலக்கத்தில் இயங்குகிறது. முஸ்லிம் ஹென்டிலின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி அன்ஸார் முஹம்மட் மிஹ்ழார் உட்பட பலர் இங்கு உரையாற்றினர்.

# இலவச மரண மற்றும் அவசர சேவைகளுக்கான வாகன கையளிப்பு




(திராய்க்கேணி எம்.எப். நவாஸ்)

இலவச மரண மற்றும் அவசர சேவைகளுக்கான வாகன கையளிப்பு நிகழ்வு (25) அக்கரைப்பற்று தக்வா ஜும்மா பள்ளிவாசல் வளாகத்தில் தலைவர் எம்எம்எம் . ரியாத் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மேல்மாகாண மரண சேவைக்காகவும் அக்கரைப்பற்றை தளமாக கொண்ட சேவைக்குமென 15மில்லியன் பெறுமதியான இரண்டு வாகனங்கள் தக்வா ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களிடம் கையளிக்கப்பட்டது.

ஜெயெம்.சியாப் (ஸலபி) அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற

இந்நிகழ்வில் சிறப்பு பேச்சாளராக அக்கரைப்பற்று உலமா சபை தலைவர் MI.சித்தீக் ஆபிழ் அவர்களும் பிரதம அதிதியாக பிரதேச செயலாளரும் கௌரவ அதிதியாக மாநகர சபை ஆணையாளரும் விசேட அதிதிகளாக அக்கரைப்பற்று வைத்திய அத்தியட்சகரும் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் அக்கரைப்பற்று பிரதேச சபையின் செயலாளரும் இன்னும்

உலமாக்கள் அரச உத்தியோகத்தர்கள் தொழிலதிபர்கள் சட்டத்தரணிகள் சமூக அமைப்புக்களின் தலைவர்கள் கழகங்களின் உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஜனாஸா குழுவின் பொறுப்பாளரும் சமுர்த்தி முகாமையாளருமான என்ரீ.மசூர் அவர்களிடமும் தேசிய மரண உபகார இணைப்பாளரும் அகில இலங்கை வைஎம்எம்ஏ பொலன்னறுவை மாவட்ட பணிப்பாளருமான MSM அப்துல் காதர் ஓய்வு பெற்ற அதிபர் அவர்களிடமும் வாகன திறப்புக்கள் கையளிக்கப்பட்டன.




காஷ்மீர் கறுப்பு தினத்தினை முன்னிட்டு காஷ்மீர் மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் அமைதியான கவன ஈர்ப்புப் போராட்டமும் பத்திரம் கையளிக்கும் நிகழ்வு ஒக்டோபர் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்திற்கு முன்பாக நடைபெற்றது.

# கைத்தொலைபேசி மூலம் பதிவு செய்த சட்டத்தரணிக்கு 8 மாத கால பணித்தடை

உயிர்த்த ஞாயிறு சம்பவம் தொடர்பான விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையின் போது கையடக்கத் தொலைபேசியை எடுத்துச் செல்லும் சட்டத்தரணி நிஸாம் முஹம்மட் சமீமுக்கு 8 மாத காலத்திற்கு வக்கீல் தொழில் செய்வதற்கு உயர்நீதிமன்றம் தடை செய்தது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் முக்கியஸ்தரான முர்ஷித் முளப்பரின் கைத்தொலைபேசியில் 2020 செப்டம்பர் 09ஆம் திகதி விசாரணை நடைபெறும் போது விசாரணைகளில் அளித்த வாக்குமூலத்தைப் பதிவு செய்ததாக ன இவர் மீது குற்றம் சாட்டி சென்றிருந்தார்.

ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த பொதுபலசேனாவின் பிரதானி யான கலகொட அத்தே ஞான சார தேரருக்கு கையடக்க தொலைபேசி வைத்திருக்க அனுமதி வழங்காத நிலையில், ஜம்இய்யத்துல் உலமாவின் உதவிச் செயலாளர் மௌலவி முர்ஷித் முளப்பரின் தொலைபேசியை சட்டத்தரணி எடுத்துச் சென்றுள்ளார். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் சட்டத்தரணி சமீமுக்கு 2024 ஜனவரி முதல் 8 மாதங்களுக்கு நீதிமன்ற பணிகளைச் செய்வதற்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது.

# சத்திர சிகிச்சைக்கான நிதி உதவி கோரல்

D 80/4, அம்பருப்ப, ஹெம்மாதகம. என்ற முகவரியில் வசிக்கும் முஹம்மது ரிஷாம் ராசிக் அவர்களின் மகள் எம். ஆர். ஷப்கா என்ற மாணவி தற்போது (க.பொ.த) சாதாரண தரத்தில் மிகச் சிறப்பாகக் கற்று வருகின்றார். 15 வயதுடைய இம்மாணவி பிறந்து ஆறு மாதகாலத்திலிருந்து தலசீமியா மேர்ஜர் நோயினால் பாதிக்கப்பட்டு இன்றுவரை அதற்குரிய சிகிச்சையினை பேராதனை வைத்தியசாலையின் நான்காம் பிரிவில் பெற்று வருகிறார்.

மாணவி எம்.ஆர் ஷப்காவினைப் பரிசோதிக்கும் வைத்தியரான டாக்டர் கிரிஷ்ன பிரதீப் இச்சத்திர சிகிச்சையை அவசரமாக மேற்கொள்ளுமாறு வேண்டிக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் மகளின் சத்திர சிகிச்சையானது வைத்தியரின் ஆலோசனைப்படி இந்தியாவில் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

குறித்த சத்திர சிகிச்சைக்காக இந்தியாவில் ஆறுமாதகாலம் தங்க வேண்டிய ஒரு நிலையும் இருக்க, சத்திர சிகிச்சைக்காகவும், தங்கும் வசதிகளுக்காகவும் சுமார் 22 மில்லியன் ரூபாய் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கான உதவிகளை குடும்பத்தவர்களிடமிருந்து சேகரித்துக் கொண்டிருக்கும் அதேவேளை, தொகை பெரிதாக இருப்பதனால் உங்களின் மேலான உதவிகளையும் எதிர்பார்க்கின்றோம்.

"ஒரு மனிதனை வாழவைத்தவர் எல்லா மனிதர்களையும் வாழ வைத்தவர் போலாவார்" (அல்குர்ஆன் 5:32)

அல்லாஹ் உங்களை பொருந்திக் கொள்வானாக

Bank Details*
*Account Holders:joint account:
Mansoor Aboo Saheedu/
Muhammadu Richard/MBAM
Samsul Arifeen

Bank Name : People's Bank
Branch : Hemmathagama
Account Number : 221-2-001-8-0041152
Swift code : PSBKLKLX



**சுஐப்.எம்.காசிம்**

# இடைவெட்டுக்குள் ஒளியும் இனச்சுத்திகரிப்புக்கள்!

ஒக்டோபரின் அந்திம பகுதியில் வடபுலத்தின் வலிகள் நினைவூட்டப்படுவது வழமை. வரலாறுகள் மறக்கப்படவோ அல்லது எவராலும் அதை மறுதலிக்கவோ முடியாது. இந்த யதார்த்தத்துக்குள்ளிருந்துதான் இவை மீட்கப்பட வேண்டும். பழைய பகைகளை உயிர்ப்பித்து, குரோதம் வளர்க்கும் விரோதம் இந்த நினைவூட்டல்களில் இருக்கக் கூடாது. இதை விரும்பியவனாகவே இந்தக் கட்டுரையை எழுதுகிறேன்.

தாயக பூமியிலிருந்து விரட்டப்படுவதும், வாழ்வதற்கான உரிமைகள் மறுக்கப்படுவதையும் விட வேறு வலிகள் அல்லது வேதனைகள் ஏது? இதனாலேயே, இந்த இருத்தலுக்கான போர்கள் மிக வலிமைகளாக உள்ளன. “இழந்தது போதும், இருப்பதை பாதுகாப்போம்“ என்ற மன வலிமைகளுடன்தான் இப்போர்கள் இடம்பெறுவதுண்டு. இவ்வாறான மனவலிமைகள் சில வேளைகளில் மனவலிகளாக மாறுமளவுக்கு போர்க்களங்கள் உக்கிரமடைவதுமுண்டு. இதற்கு இன்று நடைபெறும் உக்ரைன் – ரஷ்யா மற்றும் இஸ்ரேல் – காஸா போர்கள் கண்ணெதிர் சாட்சிகள். 610 நாட்களைக் கடந்துள்ள மேற்கு யுத்தமும் மூன்று வாரங்களை தொட்டு நிற்கும் மத்திய கிழக்கு மோதலும் ஏற்படுத்தியுள்ள வலிகள், விரட்டப்பட்ட என்போன்ற அகதிகளுக்கு ஏற்பட்ட வடுக்களை விட எத்தனை மடங்கோ?

இந்தப் போரில் மனச்சாட்சிகளுக்கு இடமிருக்காது, மனுக்குலத்தின் மீது தயவிருக்காது. காஸா மக்களை வெளியேறுமாறு கோரப்பட்டுள்ளதால் சிலர் வெளியேறலாம். உறவுகள், சொத்துக்கள், கால்நடைகள், தோட்டங்கள் மற்றும் தொழில்புரியும் நிலங்களை விட்டு வெளியேறுவதை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

வடபுல முஸ்லிம்களும் காஸா முஸ்லிம்களும் நமது நாட்டிலிருந்து வெளியேறிய தமிழ் சகோதர்களை போலவல்ல. ஏனெனில், இவர்களின் வெளியேறலோ, தமிழர்களின் தாயக உரிமைக்கான தேவையை சர்வதேசமயப்படுத்தியிருக்கிறது. ஆனால், காஸா மற்றும் வடபுல நிலைமைகள் இவ்வாறில்லை. காஸா சகோதரர்களுக்கோ ஏற்கனவே இருந்த தாயக உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. வடபுல முஸ்லிம்களுக்கோ கிடைக்கவிருந்த உரிமை நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இதில், இனச்சுத்திகரிப்புக்கான வடிவங்கள் வெவ்வேறு இடைவெட்டுக்களுக்குள் வேலையாற்றியுள்ளன.

நமது நாட்டு அரசியல் பிணக்குகளை தீர்ப்பதற்கான முயற்சிகள் வெற்றியளிக்கட்டும். இத்தேசிய பிரச்சினைகளுக்குள் சில சில்லறை முடிச்சுக்கள் அவிழ்க்கப்பட வேண்டியுள்ளன. தமிழ் பேசும் மக்களின் நிலமென்றால் என்ன? சிறுபான்மையினரின் உரிமைகள் எவை?தமிழர்களையும் முஸ்லிம்களையும் வேறுபடுத்தும் அரசியல் எது? சிங்கள தேசதியவாதத்தை மையப்படுத்தியா தமிழ் பேசும் அரசியல் பயணிக்கிறது? அல்லது மொழியை விடவும் மதங்கள் சிறுபான்மை அரசியலுக்குள் ஆதிக்கம் செலுத்துகிறதா? இக்கேள்விகளின் விடைகளிலிருந்துதான் வடபுல முஸ்லிம்களின் வெளியேற்றத்தை அலச வேண்டியுள்ளது.

சிறுபான்மைச் சமூகங்கள் அல்லது தமிழ்மொழிச் சமூகங்கள் எனப்படுவது தமிழர்களையும் முஸ்லிம்களையும்தான். இவர்கள், சிங்கள தேசியவாதத்தை மையப்படுத்திய பார்வையில் சிறுபான்மைச் சமூகங்களாகவே உள்ளனர்.

இந்தப் பார்வை, பொதுவான உரிமைப் போராட்டத்தில் இவர்களை ஒன்றிணைக்க உதவுகிறது. மொழி மற்றும் நிலம் என்பவற்றுக்குள் சுருங்கிய நிலையில் (வடக்கு, கிழக்கு) உள்ளன இப்பார்வைகள். மதமென்று வருகின்றவேளை, முஸ்லிம்கள் வேறுபடுத்தப்படுகின்றனர் அல்லது வேறுபட விரும்புவதாகவும் சொல்லலாம். வடபுல வெளியேற்றம்தான் இந்த வேறுபடலை வேரூட்டி வளர்த்திருக்கிறது. எனவே, வெளியேற்றத் தூண்டிய சக்திகளின் மனநிலை அப்போது எப்படியிருந்தது என்பதையே தேடிப்பார்க்க வேண்டும்.


ஆயுத அமைப்பின் உயர் மட்டம் விரும்பியிருந்தாலும் அடிமட்ட போராளிகள் மற்றும் சக சகோதரர்கள் விரும்பவில்லை. ஏன், மிதவாத தமிழ் அரசியல் தலைமைகள் இவ்வெளியேற்றத்தை வெறுத்தேயிருந்தன. ஆனால், வெளியில் பேசுமளவுக்கு நிலைமைகள் அன்று இருக்கவில்லை.

காஸாவில் நடக்கும் எல்லை கடந்த மனித உரிமை மீறல்களை எமது நாட்டின் தமிழ் தலைமைகள் முன்னின்று கடுமையாக கண்டிப்பது, முஸ்லிம் தலைமைகளுக்கு ஒரு படிப்பினைதான். ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு எதிரான மனநிலையிலேயே இன்னும் தமிழர்கள் இருக்கின்றனர். எனவே, முஸ்லிம்களும் அரச ஆக்கிரமிப்பு செயற்பாடுகளை சிறுபான்மைச் சமூகங்கள் என்ற உணர்வில் கண்டிக்க முன்வருவது சிறந்ததென்ற பொதுவான படிப்பினையை புடம்போட்டுக் காட்டுகிறது இக்கண்டனங்கள்.

பொத்துவில் மு/ஹுது மலை விவகாரம் இன்னும் குருந்தூர் மலை, மயிலிட்டி என அடுக்கிக்கொண்டே செல்லக்கூடிய சம்பவங்களை ஆக்கிரமிப்புக்கான அடையாளமாகவே தமிழ்மொழிச் சமூகங்கள் நோக்க வேண்டியுள்ளன. நோக்குகின்றனர்தான், தீர்வவென்று வருகின்ற போதுதான் தேவையில்லாத சர்ச்சைகள் தலைக்கின்றன.





## றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி சமூக சேவை அமைப்பால் சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலைக்கு ஒரு தொகுதி வர்ணப்பூச்சு பெட்டிகள் அன்பளிப்பு

(எம்மையெம் அஸ்ஹர்)

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலை கல்வி சமூகத்தின் சார்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளை தொடர்ந்து ஒரு தொகுதி வர்ணப் பூச்சு பெட்டிகளை றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி சமூக சேவை அமைப்பு பாடசாலை அதிபர் நஸ்லின் றிப்கா அன்சாரிடம் வழங்கி வைத்தது.

வகுப்பறைகளில் பிள்ளை நேய கற்றல் சூழலினை உருவாக்கும் நோக்கத்துடன் இவ்வுதவியினை இப் பாடசாலை மாணவர்களின் நலன்களுக்காக வழங்கியுள்ளமையானது மிகவும் பெறுமதியான ஒரு செயற்பாடாகும்.

இந்நிகழ்வில் றிஸ்லி முஸ்தபா அவர்களின் இணைப்பதிகாரியும் திடீர்மரண விசாரணை அதிகாரியுமான அல் ஜவாஹிர் இபாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.





# மீள்குடியேற்றக் கனவு நனவாகுமா?

**கலாபூஷணம் பரீட் இக்பால்**
**யாழ்ப்பாணம்**

யாழ். மண்ணில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த நாம் இன்று எட்டுத் திசைகளிலும் சிதறி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். யாழ் மண்ணின் முஸ்லிம் மைந்தர்களாகிய நாம் அம்மண்ணை விட்டு விரட்டியடிக்கப்பட்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதியன்று 33 ஆண்டுகளாகின்றன. 33 ஆண்டுகள் கடந்த நிலையிலும்கூட அந்த துரதிர்ஷ்டமான கோரச் சம்பவம் யாழ் முஸ்லிம் மக்களின் மனதில் அழியாத வடுக்களாக என்றுமே நிலைத்திருக்கின்றன. சொந்த வீட்டை விட்டு, சொந்த ஊரை விட்டு, சொத்து சுகங்களை இழந்து கைக்குழந்தைகளோடு எதிர்காலமே சூனியமான நிலையில் வெறுங்கைகளோடு பிறந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட கோரச்சம்பவத்தை நினைத்துப் பார்த்தால் எம் உள்ளம் கொதிக்கிறது. உடல் சிலிர்த்து கண்கள் நனைகின்றன. எனினும், அத்துரதிர்ஷ்ட நினைவுகளை கொஞ்சம் மீட்டிப் பார்க்கிறோம்.

“யாழ்ப்பாணம் என்று சொன்னால் தேன்சுவை ஊறும், பனையிலையும் புகையிலையும் நன்றாக வளரும்” என்ற இனிய பாடல் வரிகளே யாழ் மண்ணின் இனிமைக்கு சான்றாகும்

1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி அதுதான் எம் வாழ்வின் துரதிர்ஷ்ட நாள். இப்படியானதொரு கோரச்சம்பவத்தை எதிர்பார்க்காத எம் முஸ்லிம் மக்கள் அனைவரும் தம் அன்றாட வேலைகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சுமார் காலை 8 மணியளவில் 1000 இற்கும் மேற்பட்ட ஆயுதமேந்திய புலிகள் யாழ்ப்பாணம் சோனகத் தெருவை சுற்றி வளைத்தனர். முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் பகுதிதான் சோனகத் தெரு. புலிகளின் திட்டத்தை அறியாத அப்பாவி மக்களாகிய நாம் அனைவரும் அதிகூடிய புலிகளின் வருகையைப் பார்த்துத் திகைத்தோம். சோனகத் தெருவை சுற்றியிருந்த அயல் கிராமங்களுக்கு வியாபாரத்திற்காக சென்ற எம் முஸ்லிம் சகோதரர்களை அவசரமாக சோனகத் தெருவிற்கு செல்லுமாறு புலிகள் அக்கிராமங்களுக்குச் சென்று ஒலிபெருக்கியில் அறிவிப்பு விடுத்தார்கள். வியாபாரத்திற்கு சென்ற எம் சகோதரர்கள் நிகழவிருக்கும் விபரீதம் தெரியாமல் உடனே சோனகத் தெருவிற்கு விரைந்தார்கள்.

புலி உறுப்பினர்கள் வாகனங்களில் ஏறிக்கொண்டு ஒலிபெருக்கியை கையில் வைத்துக்கொண்டு வீதி வீதியாக சென்று அழைப்பு விடுத்தார்கள். “முஸ்லிம்களே! ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒருவர் உடனடியாக ஒருவர் ஒஸ்மானியா கல்லூரியின் ஜின்னா மைதானத்திற்கு இப்போதே வர வேண்டும்” என்று கட்டளையிட்டுச் சென்றனர். நாம் அனைவரும் ஜின்னா மைதானத்திற்கு விரைந்து ஓடினோம். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் என ஜின்னா மைதானம் நிரம்பி வழிந்தது. எம்மை ஆயிரக்கணக்கான புலிகள் ஆயுதங்களுடன் சுற்றி வளைத்தனர். நாம் அனைவரும் என்ன ஏதென்று புரியாமல் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துக் கொண்டிருந்தோம். அப்போது இளம்பருதி என்ற புலி உறுப்பினர் ஒருவன் மைதானத்தின் நடுவே மோட்டார் சைக்கிள் ஒன்றின் மேல் ஏறி நின்று கொண்டு கையில் ஒலிபெருக்கியுடன் பேசத் தொடங்கினான். “முஸ்லிம் மக்களே! உங்களுக்கொரு துயரச் செய்தி. நீங்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தை விட்டு உடனடியாக இன்னும் 2 மணித்தியாலங்களில் வெளியேற வேண்டும். இது எம் தலைவரின் உத்தரவு. தமிழீழத்தில் உழைத்தவை எல்லாம் தமிழீழத்திற்கே சொந்தம். உங்கள் சொத்துக்கள் அனைத்தையும் இங்கே விட்டு விட்டு நீங்கள் உடனே வெளியேறுங்கள்” என்று ”இளம்பருதி” கூறியதுதான் தாமதம் எமக்கு தலைசுற்றி உலகமே ஒருகணம் இருண்டு விட்டது. இது கனவா? இல்லை நனவா? என்று உணர முடியாமல் தடுமாறி விட்டோம். அடுத்தது என்ன செய்வதென்று புரியாமல் எதிர்காலமே எம் கண்களுக்கு சூனியமாக தென்பட்டது. ஜின்னா மைதானமே கதிகலங்கியது. எம் பெண்கள், ஆண்கள் அனைவரினதும் கண்களிலிருந்தும் கண்ணீர் மாலை மாலையாக ஓடத் தொடங்கியது. செய்வதறியாது அனைவரும் திண்டாடினோம். எம் சகோதரர்கள் சிலர் புலிகளிடம் நியாயம் கேட்டார்கள். வாதாடினார்கள். “எம் பிறந்த மண்ணை விட்டு நாம் ஏன் போக வேண்டும்? இது எங்களுடைய சொந்த இடம் நாங்கள் போக மாட்டோம்” என கூச்சலிட்டார்கள். பெண்கள் கதறியழுது கண்ணீர் விட்டு கெஞ்சினார்கள்.

புலிகள் மனமிரங்கவில்லை. “இது எங்கள் தலைவரின் உத்தரவு. நீங்கள் அனைவரும் வெளியேறித்தான் ஆக வேண்டும். ஊரை விட்டு நீங்கள் செல்லாவிட்டால் அநியாயமாக அனைவரும் சுட்டுக் கொல்லப்படுவீர்கள்” என்று கூறிக்கொண்டு வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுடத் தொடங்கினார்கள். அதைத் தொடர்ந்து புலி உறுப்பினர்கள் அனைவரும் வானத்தை நோக்கி வேட்டுக்களை தீர்த்தனர். ஒஸ்மானியா கல்லூரியின் ஜின்னா மைதானமே வெடிச் சப்தத்தினால் அதிர்ந்தது. நாம் அனைவரும் பயந்து நடுநடுங்கி விட்டோம். வீட்டில் இருந்தவர்களும் ஜின்னா மைதான துப்பாக்கி வேட்டுச் சப்தத்தை கேட்டு எம்மவர்களுக்கு என்ன நேர்ந்ததோ என தெரியாது அல்லோல கல்லோலப்பட்டு ஜின்னா மைதானத்தை நோக்கி நடுநடுங்கி விரைந்தனர். ஜின்னா மைதானம் மேலும் நிறைந்து வழிந்தது. இனி இங்கிருந்தால் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று நன்றாக புரிந்து விட்டது. மனைவி, மக்கள், குழந்தைகளை உயிருடன் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம்தான் அனைவரின் உள்ளங்களிலும் நிலைத்திருந்தன. பயந்து, நடுங்கி, அழுது வீங்கிய முகங்களுடன் இனி என்ன நடக்கப் போகிறது என்ற எண்ணத்துடன் ஒஸ்மானியா கல்லூரியின் ஜின்னா மைதானத்தை விட்டு அனைவரும் அவரவர் வீடுகளுக்கு சென்றோம். எமக்கு நடந்த அநியாயத்தைப்போல இனி யாருக்குமே நடக்கக் கூடாது. சொந்த ஊரை விட்டு, சொந்த வீட்டை விட்டு, சொத்து சுகங்களை இழந்து கைக்குழந்தைகளோடு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு எங்கே போவது? என்ன செய்வது? என்று தெரியாமல் நடைபிணமாக ஊரை விட்டு வெளியேறுவது என்றால் சும்மாவா?

ஒஸ்மானியா கல்லூரியின் ஜின்னா மைதானத்திலிருந்து வீடுகளுக்கு சென்றதுதான் தாமதம் புலி உறுப்பினர்கள் வீடுகளினுள் புகுந்து எம் சொத்துக்களை சூறையாடத் தொடங்கினார்கள். 2 மணித்தியாலங்களில் வெளியேறுங்கள் என்று மைதானத்தில் வைத்துக் கூறிவிட்டு வீடுகளினுள் புகுந்து உடனே வெளியேறும்படி அவசரப்படுத்தினார்கள். இனி இங்கிருந்து பயனில்லை, மீறி இருந்தால் உயிர்தான் போகும், எங்கேயாவது போய் உயிரோடாவது இருப்போம், பிள்ளைகளைக் காப்பாற்றுவோம் என்ற நோக்கில் நாம் அனைவரும் பிறந்த மண்ணை விட்டு பிரிய ஆயத்தமானோம். கண்ணில் நீருடனும் நெஞ்சில் கனச் சுமைகளுடனும் நடைபிணமாக வெளியேறினோம்.

பெண்கள் சிலர் தமது பணம், நகைகளை மறைத்துக்கொண்டு ஊரை விட்டு வெளியேற முனைந்தனர். பெண் புலி உறுப்பினர்கள் பெண்களையும் ஆண் புலி உறுப்பினர்கள் ஆண்களையும் உடல் பரிசோதனை செய்து அவர்களின் உடமைகளை பறித்தெடுத்தனர். பெண்களின் நகைகளை கழற்றினார்கள். காதணிகளைக்கூட விடவில்லை. நகைகளுடன் காணப்பட்ட பெண்கள் ஒரு மஞ்சாடி நகை கூட உடலில் இல்லாத நிலையைப் பார்க்கும்போது மிகுந்த கவலை ஏற்பட்டது.

பிறந்து ஓரிரு நாட்கள் கூட கடக்காத பச்சிளம் பாலகர்களை கையில் ஏந்திக்கொண்டு கண்ணீரோடு நின்ற எம் சகோதரிகளையும் கட்டிலோடு படுக்கையில் கிடந்த வயதான நோயாளர்களை கையில் ஏந்தி நின்ற எம் இளைஞர் சமூகமும் தத்தளித்து நின்ற அந்த அவலக் காட்சி எம் மனக்கண் முன் தோன்றி மறைகின்றது. அந்த கசப்பான அனுபவத்தை மறக்க முயன்றாலும் அன்றைய நினைவுகள் எம் மனதில் ஒன்றன் பின் ஒன்றாக நிழற்படங்களாக ஓடிக்கொண்டே இருக்கின்றது......

விடுதலைப் புலிகளின் எண்ணத்தில் இக்காட்சிகள் எவ்வாறு தோன்றினவோ தெரியவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் பேசும் தமிழே எங்களின் தாய்மொழியும்கூட. எங்களுக்கு இந்தக் கதியா? சிறுகுழந்தைகளின் கையில், கழுத்தில், காதில் இருந்த நகையைக்கூட பிடுங்கி எடுத்துக் கொண்டனர். கழற்ற முடியாத நகைகளை வெட்டி எடுத்தனர். ஆண்களிடமிருந்து பணத்தைப் பிடுங்கினார்கள். செலவுக்குப் பணம் வேண்டுமே என கெஞ்ச, ஒவ்வொரு குடும்பத்திற்கும் இருநூறு ரூபா மட்டுமே கொண்டு செல்ல அனுமதித்தனர். இப்படியான ஓர் அவலநிலை இனி இந்த நாட்டில் யாருக்குமே வரக்கூடாது. சொந்த ஊரில் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு பெருமிதமாக வாழ்ந்துகொண்டிருந்த எம்மை வெளியூர்களில் அகதி எனும் பட்டத்தோடு கூனிக்குறுகி நாலாபுறமும் சிதறி வாழ வைத்துவிட்டார்கள் இந்த தமிழீழ விடுதலைப் புலிகள்.

வடக்கில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதற்கும் தமிழ் மக்களுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. அவர்கள் வெளியேற்றப்பட்டமைக்கு புலிகள் மாத்திரமே காரணம். முஸ்லிம்களை வெளியேற்றும்போது தமிழ் மக்களின் முக்கியமானவர்கள், இந்து சமய குருக்கள், கிறிஸ்தவ பாதிரிமார்கள் முஸ்லிம்களின் வெளியேற்றத்தினை தடுத்து நிறுத்த விடுதலைப் புலிகளிடம் உடனடி அவசரப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியும்கூட அவை தோல்வியிலேயே முடிவடைந்தன.

2002 ஆம் ஆண்டு வட்டக்கச்சியில் நடந்த புலிகள் இயக்கத் தலைவர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் பங்குபற்றிய மதியுரைஞரான அன்டன் பாலசிங்கம் முஸ்லிம்களின் வெளியேற்றம் ஒரு துன்பியல் சம்பவம் என்று மட்டும் கூறி இதுதொடர்பில் முஸ்லிம் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தார்.

காலம் தாழ்த்தியாவது வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமை தவறு என உணர்ந்தனர் புலிகள். இது எமக்கு ஓரளவு ஆறுதலளித்தது.

முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்த காத்திரமான, அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

33 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ் முஸ்லிம்களாகிய நாங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் என்று எவ்வாறு ஒன்றாக இருந்தோமோ அந்நிலைமை ஏற்பட வேண்டும்.

தற்போது வடக்கில் முஸ்லிம்கள் தன்மானத்துடனும் சுயமரியாதையுடனும் பாதுகாப்புடனும் எமது சமய, கலாசாரத்துடனும் வாழ நல்ல சூழல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் காத்திரமான, அர்த்தபுஷ்டியான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டுகிறோம்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசியல் பேதமின்றி ஒற்றுமையுடன் செயற்பட்டு முஸ்லிம்களின் மீள்குடியேற்ற திட்டத்தில் கூடிய கவனம் எடுக்குமாறு வேண்டுகிறோம்.

# ஊடகவியலாளர் நமாஸ் சமூகத்திற்காற்றிய பணிகள் மறவாதவை!

(காசிம் எம்.ஜுனூத்)

புத்தளம் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளரும் புத்தளம் ஸாஹிரா தேசியக் கல்லூரியின் ஆசிரியருமான மர்ஹூம் ஜே. இஸட்.அப்துல் நமாஸ் அவர்களின் திடீர் மறைவானது அவரது குடும்பத்தினருக்கு மாத்திரமன்றி, ஊடக நண்பர்கள் ஆசிரியர் குழுவினர் மற்றும் அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் என்று தராதரம் பார்க்காமல் அனைவருக்கும் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

சிறிது காலம் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்த அவர், கடந்த ஞாயிற்றுக்கிழமை (15.10.2023) இறைவனின் அழைப்பை ஏற்றுக்கொண்டார். அன்னாரது ஜனாஸா நல்லடக்கம் அன்றைய தினம் இரவு 9.00 மணியளவில் புத்தளம் மஸ்ஜிதுல் பகா முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரது ஜனாஸா நல்லடக்கத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள்,உலமாக்கள், அரசியல் பிரமுகர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்துகொண்டனர்.

மூன்று ஆண் சகோதரர்களுடன் பிறந்த இவர் குடும்பத்தில் மூத்த பிள்ளையாவார். நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் மரணிக்கும் போது இவருக்கு 57 வயதாகும்.மர்ஹூம் ஜே.இஸட்.அப்துல் நமாஸ் அவர்களின் மனைவி மற்றும் மூத்த பிள்ளையும் அசிரியைகளாக கடமையாற்றி வருகின்றனர்.அவர் உயிருடன் இருக்கும் போதே மூத்த மகளுக்கும் இளைய மகளுக்கும் திருமணத்தை முடித்து வைத்துள்ளார். அவரின் இரண்டு மகன்களும் கல்வி கற்று வருகின்றனர்.இவர் இஸ்லாத்தின் இறுதிக் கடமையாம் புனித ஹஜ்ஜையும் நிறைவேற்றியுள்ளார்.

புத்தளம் – சென் அன்ரூஸ் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்ற மரஹூம் ஜே.இஸட்.ஏ.நமாஸ், க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று க.பொ.த. உயர் தரத்தை புத்தளம் ஸாஹிரா தேசியக் கல்லூரியில் வர்த்தகத்துறையில் கற்றார்.

பின்னர், யாழ். பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய



இவர், 1996 ஆம் ஆண்டு வர்த்தகத்துறையில் சிறப்புப் பட்டதாரியாக பட்டம் பெற்றார். மேலும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்விக்கான முதுகலை டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகம் என்பனவற்றில் கல்வி கற்கும் காலங்களில் சிரேஷ்ட மாணவத் தலைவராகவும், மாணவ மன்றங்களின் தலைவராகவும், விளையாட்டுக்குழுக்களுக்கு பொறுப்பாளராகவும் இருந்து தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை முடித்துவிட்டு, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் இணைந்துகொண்டு காசாளராக கடமையாற்றினார்.

அத்துடன், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் புத்தளம், ஆனமடு, திருகோணமலை ஆகிய அலுவலகங்களில் 2004 ஆம் ஆண்டு வரையும் காசாளாராக கடமையாற்றியுள்ளார்.

பின்னர் 2004.11.15 ஆம் திகதி இலங்கை ஆசிரியர் சேவைக்குள் நுழைந்த இவர், கடையாமோட்டை மு.ம.வித்தியாலத்தில் வணிகத் துறை ஆசிரியராக நியமனம் பெற்றார்.

அதனையடுத்து, புத்தளம் வெட்டாளை அசன் குத்தூஸ் முஸ்லிம் மஹா வித்தியாலயம், புத்தளம் பாத்திமா மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலும் கற்பித்த இவர், இறுதியாக ஓய்வுபெறும் வரை புத்தளம் ஸாஹிரா தேசியப் பாடசாலையில் வணிகம் மற்றும் கணக்கியல் பாட ஆசிரியராக கடமையாற்றினார்.

ஆசிரியராக நியமனம் பெற்றது முதல் தான் கற்பித்த பாடசாலைகளில் கல்வி அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி, மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய மர்ஹூம் ஜே.இஸட்.அப்துல் நமாஸ் குறிப்பாக வரிய மாணவர்களின் கல்விக்கு அதிகம் உதவி வந்தார்.

1990 ஆம் ஆண்டு புத்தளம் முஸ்லிம் நலன்புரி சங்கம் ஒன்றை ஆரம்பித்து, அதன் தலைவராகவும் செயற்பட்டார். இதன் மூலம் பொருளாதாரத்தில் நலிவடைந்து காணப்படும் மாணவர்களுக்கு இலவச கல்வி கருந்தரங்குகளை வழங்கி வந்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு ஒரு சிலரின் உதவியில் காலப்பகுதியில் ஸிடைட மபௌ எனும் அமைப்பை உருவாக்கி ஐந்தாம் தர மாணவர்கள், க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்களுக்காக விஷேடமாக தயாரிக்கப்பட்ட ”அறிவுச்சுடர்” எனும் பரீட்சை வழிகாட்டி , சிறுகதைகள், கட்டுரைகள் என்பனவற்றை உள்ளடக்கிய சஞ்சிகை ஒன்றையும் வெளியிட்டார்.

கணினி இல்லாத அந்தக் காலத்தில் தட்டச்சு இயந்திரத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, அது புத்தக வடிவில் சஞ்சிகையாக தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தார்.

அது மாத்திரமன்றி, ஸிடைட முபௌ மூலம் ”பெட்மின்டன்” கழகம் ஒன்றையும் புத்தளத்தில் உருவாக்கினார். இதன் மூலம் பயிற்றப்பட்ட நடுவர்கள் உருவாக்கி புத்தளத்திற்கும், அகில இலங்கை ரீதியாகவும் பெருமை சேர்த்தது.

மேலும், வசதி குறைந்தவர்களுக்கு ஏற்படும் பாரிய நோய்களுக்கு புத்தளம் தனவந்தர்களின் நிதி பங்களிப்பில் உதவும் நோக்கில் புத்தளம் பெரிய பள்ளிவாசலை தலைமையகமாக கொண்டு 1998 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை இயங்கி வரும், வைத்திய சகாய நிதியத்தை உருவாக்கிய ஸ்தாபகர்களுள் ஒருவராக காணப்படும் இவர், இந்த நிதியத்தை முன்னேற்ற பல வழிகளிலும் அர்ப்பணிப்புக்களுடன் செயற்பட்டுள்ளமை ஏனைய ஸ்தாபக உறுப்பினர்கள் மூலமாக தெரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

அத்துடன், 1990 ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் புத்தளம் பெரிய பள்ளிவாசலின் கீழ் ”நல்லிணக்க குழு” ஒன்றை உருவாக்குவதற்கு மர்ஹூம் ஜே.இஸ ட்.அப்துல் நமாஸ், முன்னின்று செயற்பட்டுள்ளார். அதுவே நாளடைவில் விருத்தி அடைந்து தற்பொழுது ”மஜ்லிஸ் சூறா” வாக இயங்கி வருகிறது.

அத்தோடு, 1959 ஆம் ஆண்டு புத்தளத்தில் உருவாக்கப்பட்ட இஸ்லாமிய முன்னணி இயக்கம் எனும் அமைப்பின் ஊடாக நடத்தப்பட்ட அஹதிய்யா வகுப்புக்களில் 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரண்டு வருடங்கள் தொண்டர் ஆசிரியராக கடமையாற்றி வந்துள்ளார்.

புத்தளம் ஸாஹிரா தேசியக் கல்லூ ரியில் ஆசிரியராக கடமையாற்றி வந்த காலப்பகுதியில், ”ஸெபக்தக்ரோ” எனும் போட்டியை மர்ஹூம் ஜே.இஸ ட்.அப்துல் நமாஸ் ஆசிரியரே பாடசாலையில் அறிமுகம் செய்து வைத்துள்ளார்.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தின் முஸ்லிம் லீக் வாலிப முண்ணனிகளின் சம்மேளனத்தின் முன்னாள் பணிப்பாளராக செயற்பட்ட மர்ஹூம் ஜே.இஸட்.அப்துல் நமாஸ், வாலிப முண்ணனிகள் ஊடாக புத்தளம் மாவட்டத்துக்கு பல சேவைகளை முன்னெடுத்துள்ளார்.

மூத்த ஊடகவியலாளர் எம்.என். அமீன் அவர்கள் முஸ்லிம் லீக் வாலிப முண்ணனிகளின் தலைவராக இருந்த போது, அப்போதைய புத்தளம் மாவட்ட பணிப்பாளராக இருந்த மர்ஹூம் ஜே.இஸட்.அப்துல் நமாஸ் அவர்களின் வேண்டுகோளின் பேரில் பாகிஸ்தான் தூதுவராலயத்தின் மூலமாக கணினி பயிற்சி நிலையம் மற்றும் தையல் பயிற்சி நிலையம் என்பவற்றை புத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

ஊடகத்துறையில் டிப்ளோமா பட்டத்தையும் நிறைவு செய்த மர்ஹூம் ஜே.இஸட்.அப்துல் நமாஸ், நவமணி ஊடாக ஊடகத்துறைக்குள் பிரவேசித்ததுடன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபணம், தினகரன், டெய்லி நியுஸ், விடிவெள்ளி மற்றும் தமிழ் மிரர் ஆகியவற்றின் புத்தளம் நிருபராக பணியாற்றினார்.

தேசிய அரசியல், சுகாதாரம், கல்வி ஆகியவற்றில் அதிக ஈடுபாடு காட்டி பல கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார்.

புத்தளம் மாவட்ட தமிழ் செய்தியாளர் சங்கத்தை ஆரம்பித்து அதன் செயலாளராக இருந்து பின் தலைவராக பணியாற்றினார். புத்தளத்தில் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்கில் 2007 ஆம் ஆண்டு ”புத்தெழில்” எனும் பத்திரிகை ஒன்றையும் சொந்த முயற்சியில் வெளியிட்டார்.

2007 ஆம் ஆண்டில் இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகராக பதவி வகித்த டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார அவர்களை நேரில் சந்தித்து புத்தளத்தின் முதல் பத்திரிகை பிரதியையும் வழங்கி பெருமை சேர்த்துள்ளார்.

இந்த பத்திரிகை வாரத்திற்கு இருமுறை வெளியிடப்பட்டது. இந்த பத்திரிகை வெளியிடுவதற்கு முன்னர் இளைஞர், யுவதிகளுக்கு இலவச ஊடக பயிற்சிகளை வழங்கினார். இவரிடம் ஊடகப் பயிற்சிகளைப் பெற்ற ஒரு சிலர் அவரோடு இணைந்து தொண்டர் அடிப்படையில் புத்தெழில் பத்திரிகையிலும் பணிபுரிந்தனர்.

மேலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நீண்ட காலமாக புத்தளம் மாவட்ட இணைப்பாளராகவும் செயற்பட்டு வந்த மர்ஹூம் ஜே.இஸ ட்.அப்துல் நமாஸ், பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஊடக கழகங்களை உருவாக்கி ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஊடாக மாணவர்களுக்கு ஊடகப் பயிற்சிளை வழங்கியுள்ளார். புத்தளத்தில் தமிழ் – சிங்கள ஊடகவியலாளர்கள் மத்தியில் இன நல்லுறவை ஏற்படுத்துவதில் அதிக ஆர்வத்தையும் காட்டினார்.

விருது பெறுவதற்கும், பெயர் போடுவதற்கும், பட்டங்களை பெருவதற்கும் கொஞ்சம் கூட விருப்பமில்லாத மர்ஹூம் ஜே.இஸ ட்.அப்துல் நமாஸ், அமைதியாக இருந்து பல்வேறு பணிகளை குறிப்பாக அவரது கப்றுக்குள் நிலையான நன்மைகளை கொண்டு சேர்க்க கூடிய பணிகளை செய்துகொண்டிருந்த நிலையில் இறைவனின் அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

மர்ஹூம் ஜே.இஸட்.அப்துல் நமாஸ் ஆசிரியர் மறைந்தாலும் அவர் இவ்வுலகில் விட்டுச் சென்றவை ஒருபோதும், மறைந்து போகாது. அன்னாருடைய இருவுலக வாழ்க்கையையும் இறைவன் பொருந்திக் கொள்ள வேண்டும். அன்னாருக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் உயர்தரமான சுவனத்தை இறைவன் வழங்க வேண்டும். அன்னாரை இழந்து தவிக்கும் அன்புத் தாய் , சகோதரர்கள் மற்றும் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கும் இறைவன் ஆறுதலையும், பொறுமையையும் கொடுக்க வேண்டும்.ஆமீன் ஆமீன் யாராப்பில் ஆலமீன்.

# Dr. ஜமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை ஊழியர்கள் கௌரவிப்பு





(யூ.எல்.எம். றியாஸ்)

கல்முனை டாக்டர் ஜமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் மாதாந்த ஒன்றுகூடலும் ஊழியர்கள் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இவ் வைத்தியசாலையின் தவிசாளர் டாக்டர் றிஸான் ஜெமீலின் வழிநடத்தலில் வைத்திய சாலையின் பனிப்பாளர் ஏம்.ஜே.இஸட்.எம் . ஜமால்டீன் தலைமையில் அதன் மற்றுமொரு கிளை நிறுவனமான சாய்ந்தமருது கிளையின் கேட்போர் கூடத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது.

கல்முனை டாக்டர் ஜமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் அதன் சம்மாந்துறை, சாய்ந்தமருது கிளைகளின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட இன் நிகழ்வில் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.


இவ் வைத்தியசாலையின் முன்னேற்றத்தில் துறை சார்ந்த ரீதியாக சிறப்பாக கடமையாற்றிய ஊழியர்களில் மூவருக்கு பனப்பரிசும், சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இம் மாதத்திற்கான சிறந்த தாதி உதவியாளருக்கான விருது செல்வி பீ. இந்திர ஜோதிக்கும், சிறந்த வரவேற்பாளருக்கான விருது செல்வி ரீ. பகிரதிக்கும் சிறந்த சுகாதார சுத்திகரிப்பாளருக்கான விருது திருமதி வீ. விஜியும் பெற்றுக்கொண்டனர்.

இரண்டு அங்கமாக இடம்பெற்ற இன் நிகழ்வில் ஊழியர்கள் மத்தியில் தொழில் ஊக்கம் மற்றும் தொழில் விருத்தி தொடர்பான செயலமர்வும் இடம்பெற்றது. இச் செயலமர்வில் உள நல வைத்திய நிபுணர் டாக்டர் யூ.எல். சராப்டீன் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார்.

இன் நிகழ்வில் இவ் வைத்தியசாலையின் முகாமையாளர் எம்.எஸ்.எம். நஜிமுடீன், டாக்டர் எம் ஏ.சீ. கலாமுடீன் மற்றும் பிரிவுகளுக்கான முகாமையாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

# தேசிய ஷூரா சபையின் அறிக்கை கையளிப்பு

பாலஸ்தீனில் இடம்பெறும் இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களை கண்டிக்கும் வகையிலும் பாலஸ்தீன மக்களுக்கு தமது ஆதரவை தெரிவிக்கும் வகையிலும் தேசிய ஷூரா சபையினால் வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையை தேசிய ஷூரா சபையின் தலைவர் சட்டத்தரணி அஸ்ஈர், அதன் செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ், ஷூரா சபையின் செயலக உறுப்பினர் நஜா முஹம்மத்



ஆகியோர் இலங்கையில் உள்ள பாலஸ்தீன தூதுவர் சுஹைர் ஸைத், மற்றும் ஐரோப்பிய யூனியன் அமைப்பின் இலங்கைக்கான உதவிப் பிரதிநிதி லார்ஸ் பிரேடல் ஆகியோரை சந்தித்து கையளித்த போது எடுக்கப்பட்ட படங்கள்.

## மனநலமும் ஆலோசனையும் 03

# அவசரக் கோளாறு



கடந்த வாரத்தில் அவசர வாழ்க்கை பற்றி தெரிந்து கொண்டோம். இன்று அவசரக் கோளாறு பற்றி தெரிந்து கொள்வோம்.

அவசரக் கோளாறு என்பது "தொடர்ச்சியான அவசரம், வேகத்தில் செயற்படுதல் மற்றும் கவலை அல்லது குழப்பத்தால் வகைப்படுத்தப்படும் ஒரு நடத்தை முறையாகும் "

"ஒரு நபர் நேரமின்மையாலோ அல்லது அதுபோன்ற ஏதாவது காரணங்களாலோ ஒரு பணியை மறந்துவிடும் அளவிற்கு பல பணிகளைச் செய்ய முனைவதும் அவசரக் கோளாறு என்றும் இன்னொரு வரையறை தரப்படுகிறது.

அவசரக் கோளாறு என்பது அவசர தேவை இல்லை என்று இருந்தாலும் கூட, இன்னும் அதிகமாகவும் வேகமாகவும் செய்ய வேண்டும் என்ற கட்டாயத் தேவையாகும்.

இருதயநோய் நிபுணர்களான மேயர் / பிரைட்மேன் மற்றும் ரே ரோசன்மேன் ஆகியோர் "அவசர கோளாறு" என்ற சொல்லை உருவாக்கினர், அவர்களது நோயாளிகளில் பலர் "நேரத்தின் அவசர உணர்வால்" பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை புரிந்து கொண்டு ஆய்வு செய்தனர்"

"குறைந்த நேரத்தில் அதிகமான விடயங்களைச் சாதிக்க அல்லது அடைய அல்லது அதிகமான நிகழ்வுகளில் பங்கேற்பதற்கான தொடர்ச்சியான போராட்டம் அல்லது இடைவிடாத முயற்சி" என்பதை அவர்கள் அவசரக் கோளாறு என்று வரையறுத்தனர்.

அவசரக் கோளாறு உள்ளவர்கள் வேகமாக சிந்திப்பார்கள், வேகமாக பேசுவார்கள், வேகமாக செயல்படுவார்கள். அவர்கள் பல பணிகளைச் செய்து, கடிகாரத்திற்கு எதிராக விரைவார்கள், விடயங்களைச் செய்ய அழுத்தம் கொடுப்பார்கள்.

ஏதேனும் ஒரு சிக்கலின் அறிகுறியால் குழப்பமடைவார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது.

"தொடர்ச்சியான அவசரம் மற்றும் குழப்பத்தால் வகைப்படுத்தப்படும் ஒரு நடத்தை முறையாக இந்த அவசரக் கோளாறு இருக்கிறது.

ஒரு பெரிய அவ்வாறே தொடர்ச்சியான அவசர உணர்வு." இங்கு தாக்கம் புரிவதை காணலாம். அத்தோடு ஒவ்வொரு பணியையும் விரைவாகச் செய்ய முனையும் தன்மையும், எந்த-வகையான தாமதத்தை எதிர்கொள்ளும்போதும் ஒரு குழப்பமடையும் நிலையையும்" இங்கு காணலாம்.

அவசர கோளாறு ஒரு உண்மையான மருத்துவ நிலை அல்ல, ஆனால் இது அதிகநேர அவசர உணர்வு என்று அறியப்படுகிறது.

நீங்கள் தொடர்ந்து அவசரப் படக்கூடியவரா அல்லது குழப்பத்தை உணரக்கூடியவராக, தேவையில்லாதபோது கூட காரியங்களைச் செய்து முடிக்க வேண்டிய அவசர மனநிலையை கொண்டவரா....?

ஆழமாக சிந்தித்துப் பாருங்கள்.

வெற்று நாட்குறிப்புடன் அவசர கோளாறுள்ள நபரை நீங்கள் ஒருபோதும் காண மாட்டீர்கள். அவர்களது நாளேடு நிரம்பியே இருக்கும்.

அவசர கோளாறுள்ளவர்கள் கடினமாக உழைக்கிறார்கள், ஆனால் அவர்கள் என்ன செய்ய முடியும் என்ற வரம்புகளை ஒப்புக்கொள்ள போராடுகிறார்கள். இதன் விளைவாக, அவர்கள் வழக்கமாக தங்கள் பணிகளுக்கு செலவிட வேண்டிய நேரத்தை விட அதிகமாக செலவிடுகிறார்கள். அவ்வாறே அதிமாக சிரமம் அடைகிறார்கள்.

இனி இந்த அவசர கோளாறின் விளைவுகள் என்ன என்பதை தெரிந்து கொள்வோம்.

ஒரு வேலையில் பிஸியாக இருப்பது பொதுவாக ஒரு நல்லொழுக்கமாக பார்க்கப்படுகிறது. ஆனால், பிஸியாக இருப்பது அவசர கோளாறாக மாறும்போது, விளைவுகள் கடுமையாக இருக்கும். இது....

சிந்திக்கும் திறனை இழக்கச் செய்யும்.

குறைவான செயல்திறன் கொண்டவராக ஆகிவிடும்.

வேலையில் பிழைகள் ஊடுருவி, "அடைய வேண்டிய இலக்கை" அடைய முடியாமல் ஆக்கிவிடும்.

வேலையின் தரம் குறையத் தொடங்குவதை உணர்த்தும்.

அவசரக் கோளாறு உடலின் கார்டிசோல் என்ற ஹார்மோனின் வெளியீட்டை அதிகரிக்கிறது. இது...

- மனச்சோர்வு மற்றும் அழுத்தம், சோம்பல் போன்ற நீண்டகால உள – உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.
- தனிப்பட்ட உறவுகளையும் பாதிக்கச் செய்து விடும்.
- நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு வழங்க வேண்டியவற்றை வழங்குவதில் கடினத்தன்மையை ஏற்படுத்தும்.
- அதிகப்படியான தூண்டுதலின் நிலையால் மனம் அவதிப்பட்டு, சோர்வு, கவலை, எரிச்சல் போன்றவற்றை உருவாக்கி விடும்.
- ஓய்வெடுக்க முடியாதபடி தன்மையை உணரச் செய்து இன்னும் அவசரப்படும் நிலையை ஏற்படுத்தி விடும்.

இப்போது புரிந்திருப்பீர்கள்....! அவசர கோளாறு எவ்வாறு எங்களை பாதிக்கச் செய்கிறது என்று...

அடுத்த வாரம் இதன் தொடர்ச்சியை பார்ப்போம்.



**அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)**
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# தெமட்டகொடை வை.எம்.எம்.ஏ. யில் ஜனாஸா வழிகாட்டல் கருத்தரங்கு






(ஐ.ஏ. காதிர் கான்)

கொழும்பு - தெமட்டகொடை, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையுடன் மத்திய கொழும்பு வை.எம்.எம்.ஏ. கிளை இணைந்து, ஆண்களுக்கு ஏற்பாடு செய்திருந்த "ஜனாஸா சட்டதிட்டங்களை தெளிவுபடுத்தும் மற்றும் வழிகாட்டல் கருத்தரங்கு", பேரவை மண்டபத்தில் (15) ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதேவேளை, பெண்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு, ஏற்கனவே செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை முதன்முறையாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பேரவையின் தேசியத் தலைவர் இஹ்ஸான் ஏ. ஹமீத், பேரவையின் கொழும்பு - கம்பஹா மாவட்டங்களின் பணிப்பாளர் நஸாரி காமில் ஆகியோரது வழிகாட்டலின் பேரில், வை.எம்.எம்.ஏ. மத்திய கொழும்பு கிளையின் சுகாதாரப் பணிப்பாளர் எம். இஸட். சித்தீக் தலைமையில் முன்னெடுக்கப்படும் இக்கருத்தரங்குகளை, ஜனாஸா சட்டதிட்டங்களைத் தெளிவுபடுத்தும் விரிவுரையாளர்களான மௌலவி ஏ. முனாப் (முஅய்யிதி) ஆண்களுக்கும், முஅல்லிமா பாத்திமா ஸப்ரா முனாப் பெண்களுக்கும், வெவ்வேறு வகுப்புக்களின் ஊடாக நெறிப்படுத்தி வருகின்றனர்.

மாதம் நான்கு முறை விடுமுறை தினங்களில், வயது வித்தியாசமின்றி இலவசமாக நடாத்தப்பட்டு வரும் இக் கருத்தரங்குகளின் மூலம், தமது சுய விருப்பங்களின் பேரில் விண்ணப்பித்து இதற்காக முன்வந்துள்ள 25 முதல் 35 வரையிலான ஆண்களும் பெண்களும் பயன் பெற்று வருகின்றனர்.

விரிவுரையாளர் மௌலவி முனாப் இங்கு கருத்துத் தெரிவிக்கும்போது, "ஜனாஸா விடயத்தில் எவரும் அச்சம் கொள்ளவோ, வெட்கப்படவோ வேண்டிய அவசியம் இல்லை. தற்காலத்தைப் பொறுத்த மட்டில், ஒரு வீட்டில் ஒருவராவது இருப்பது தான் சிறந்தது. எமது குடும்பத்தில் ஒரு ஜனாஸா ஏற்பட்டால், அதனை நாமே முன்னின்று செய்யும்போது, வீண் அலைச்சல்களிலிருந்து நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். அத்துடன், அடுத்தவர் வரும் வரை, ஜனாஸாவை காத்திருக்கச் செய்ய வேண்டிய தேவையும் ஏற்படாது. இது எமக்கு நல்லதொரு வாய்ப்பாகும். இவ்வாறான மிகவும் பயன்மிக்க வழிகாட்டல் கருத்தரங்குகளில் கலந்து கொள்வதன்மூலம், நாமே எம்மை திருத்திக்கொள்பவர்களாகவும் ஆகிவிடுவோம். மேலும், இது எமக்கு நன்மைகளைத் தரக்கூடிய ஒரு சிறந்த செயலுமாகும். எனவே, சளைக்காமல் தொடர்ந்தும் தைரியத்துடன் இங்கு வந்து, ஜனாஸாவைக் குளிப்பாட்டல், கபன் துணி வெட்டல், கபனிடல் போன்ற செயற்பாடுகளைக் கற்று, பயனடைந்து கொள்ளுங்கள். இதற்காக நேரம் காலங்களை ஒதுக்கி, ஒழுங்கு செய்து தந்திருக்கும் வை.எம்.எம்.ஏ. உறுப்பினர்களையும் இத்தருணத்தில் நாம் மறந்து விடக்கூடாது. அவர்களுக்கும் நாம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களாக உள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

# வை.எம்.எம்.ஏ. பேரவையில் யூனானி இலவச மருத்துவ முகாம்

(ஐ.ஏ. காதிர் கான்)

கொழும்பு பல்கலைக் கழக சுதேச மருத்துவ பீடத்தின் யூனானி மருத்துவத்துறை மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட "யூனானி இலவச மருத்துவ முகாம்", தெமட்டகொடை - அகில இலங்கை வை.எம். எம். ஏ. பேரவையின் அனுசரணையில், பேரவை மண்டபத்தில் (15) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.





இதில் மூட்டு வாதம், முதுகு வலி, பீனிசம், தோல் நோய்கள் உட்பட பல நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப் பட்டதுடன், நோயாளர்களுக்குத் தேவையான மருத்துவப் பரிசோதனைகள், மருத்துவ ஆலோசனைகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன. இது தவிர, நோயாளர்களுக்குத் தேவையான ஹிஜாமா, மஸாஜ் போன்ற விசேட சிகிச்சை முறைகளும் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டிருந்தன.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் தேசியத் தலைவர் இஹ்ஸான் ஏ. அமீத் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்ற இம்மருத்துவ முகாமில், சுமார் இருநூறு பேர் அளவில் கலந்து கொண்டிருந்தனர்.

பேரவையின் கொழும்பு - கம்பஹா மாவட்ட பணிப்பாளர் நசாரி காமில் உள்ளிட்ட மத்திய கொழும்பு கிளை உறுப்பினர்கள் பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

# அஹதிய்யா சம்மேளனம் உயர் கல்வி கற்கும் மாணவர்களையும் ஊக்கப்படுத்த முன்வர வேண்டும்

## - அம்பலந்துவை அஹதிய்யா விழாவில் அலி சப்ரி அறைகூவல்

(ஐ. ஏ. காதிர் கான் )

"இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களில் உயர் கல்விக்கென தெரிவாகும் மாணவிகளது எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காண்கிறோம்.

இதேபோன்று அஹதிய்யா மத்திய சம்மேளனம், உயர் கல்வி கற்கும் மாணவர்களது விடயத்திலும் அக்கறை செலுத்தி, அவர்களது பங்களிப்பையும் ஊக்கப்படுத்த முன்வர வேண்டும்" என, வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளனத்தின் 22 ஆவது ஆண்டு பூர்த்தியும் பரிசளிப்பு விழாவும், பாணந்துறை - அம்பலந்துவை, ஜாமிஉல் கைராத் அஹதிய்யா பாடசாலை ஏற்பாட்டில், களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத் தலைவர் எம்.எம்.எம். உவைன் தலைமையில், அம்பலந்துவை - இல்மா முஸ்லிம் வித்தியாலய மைதானத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.







இச்சிறப்பு நிகழ்வில், மத விவகார மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், மர்ஜான் பளீல், மலேஷியா நாட்டின் உயர் ஸ்தானிகர் பதி ஹஷாம் அடம், களுத்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். இல்யாஸ் தாஹா, அம்பலந்துவை இல்மா முஸ்லிம் வித்தியாலய அதிபரும் ஜாமி - உல் கைராத் ஜும்ஆப் பள்ளிவாசல் செயலாளருமான எம். நிஸ்மி மஹ்ரூப் மற்றும் அஹதிய்யா மத்திய சம்மேளனத் தலைவர் அல்ஹாஜ் எம்.ஆர்.எம். ஸரூக், பிரதித் தலைவர் அல்ஹாஜ் ஏ.எல்.எம். அஸ்வர், களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளன செயலாளர் ஹிசான் சுஹைல், அம்பலந்துவை அஹதிய்யா பாடசாலை தலைவர் எம்.பீ.எம். கௌஸ், அஹதிய்யா அதிபர் எம்.ஜே. எப். ஷாமிளா, அம்பலந்துவை அஹதிய்யா பாடசாலை கமிட்டிக்குழு உறுப்பினரும் தொட்டவத்தை அல் - பஹ்ரியா தேசிய பாடசாலை ஆசிரியருமான எம். சிஹான் மஹ்ரூப் உள்ளிட்ட மதத் தலைவர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

கலை கலாசார மேடை நிகழ்ச்சிகள் பல இடம்பெற்ற இவ்வழகிய சிறப்பு நிகழ்வில், களுத்துறை மாவட்டத்திலுள்ள 13 க்கும் மேற்பட்ட அஹதிய்யா

பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியைகள் மற்றும் பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மோடியை தோற்கடிக்கும் வியூகங்கள் வெற்றி பெறுமா?



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai - Tamilnadu, India)

கடந்த வாரத்தொடர்ச்சி...

தேர்தல் முடிவுகள் நிச்சயமாக பாரதிய ஜனதா கட்சிக்கு ஓரளவுக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்கிற அடிப்படையிலான கருத்து கணிப்புகள் வெளியாகியுள்ளன.

அமையவில்லை.

அடுத்த ஆண்டு, 2024 தேர்தல் இந்திய மக்களை தாண்டி சர்வதேச நாடுகளுக்கும் மிகவும் முக்கியமான காரணியாக இருக்கிறது. இந்தியா போன்ற மிகப் பெரிய தேசத்தின் வளர்ச்சி மற்றும் கொள்கைகளை ஒட்டியே முடிவுகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த காரணியாக அமைகின்றது . மிக அதிகமாக உற்பத்தி தளமாக விளங்கும் இந்தியா , சர்வதேச பொருட்கள் விற்பனையின் மிக முக்கியமான சந்தையாக இருப்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த அளவுகது மிகப் பெரிய ஜனநாயக தேசத்தின் தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்று பலரும், பல்வேறு கருத்துக்களை முறைப்படுத்த முயன்றாலும், அவற்றை முழுமையாக அதிகம் வாய்ப்புகள் உள்ளதை கண்டு அவர்கள் மிகுந்த அச்சத்திற்கு உள்ளாகி இருப்பதை நன்கு உணர முடிகிறது. எனவே தான், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள பிரதான மாநில கட்சிகள் தங்களுக்கிடையான அரசியல் கொள்கை மற்றும் கோட்பாடுகளை மறந்து விட்டு ஒருங்கிணைந்து தேர்தல் சந்தித்து முயற்சி செய்து வருவதையும் காணலாம். இது காரம், இந்த எதிர் கட்சியினரை ஒருங்கிணைப்பு செய்த கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை யாரும் ஏற்காத நிலையில் மூன்று கட்ட கூட்டங்களை அவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தியிருப்பதை நாம் மிகவும் முக்கியமான காரணியாக எடுத்து கொள்ள வேண்டும்.

ஏனெனில், மோடி என்கிற ஒற்றை தலைமைக்கு எதிராக இந்தியாவில் நாம் காணலாம். காங்கிரஸ் கட்சியின் இளம் தலைவர் ராகுல் காந்தி இந்து தேசிய சனாதன அரசியலுக்கு எதிராக மாறுபட்ட அரசியலை அவர் கையில் எடுத்து செல்வது முக்கியமாக மோடிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என்பதே பலரின் பார்வையாக உள்ளது . ஆனாலும் , ஒன்றுபட்ட எதிர் கட்சியின் கூட்டணிக்கு இந்தியா கூட்டணி என்று அவர்கள் பெயரிட்டுள்ளனர். INDIA (Indian National developmenta Inclusive alience). இந்த பெயர் மாற்றம் உண்மையில் பாரதிய ஜனதா கட்சியின் உள்வட்டாரங்களில் மிகுந்த அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன

அதே சமயம் எதிர் கட்சியினர் ஒருங்கிணைந்து "இந்தியா " என்று பெயரிடப்பட்ட கூட்டணி பல்வேறு என்கிற அடிப்படையிலான கருத்து கணிப்புகள் வெளியாகியுள்ளன.

ராகுல் காந்தி தலைமையில் ஆன காங்கிரஸ் கட்சி தற்போது ஓரளவுக்கேனும் வளர்ச்சி அடைந்து வருவதை நல்ல முன்னேற்றமாக அரசியல் வியூகம் வகுப்பாளர்கள் கணித்து வருகின்றனர். ராகுல் காந்தியை இந்து தேசியத்தின் வெளிபபடையான எதிரியாகவே இந்திய முஸ்லிம்கள் மட்டும் ஒடுக்கப்பட்ட மக்கள் பார்க்கிறார்கள். ஏனெனில் , இந்திய முஸ்லிம்கள் குறிப்பாக வட இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் கடந்த 10 ஆண்டுகளில் மிகுந்த துயரத்தை சந்தித்து வருவதைக் நாம் காணலாம்.

தற்போது காசா தாக்குதல் நடந்து வருகிற வேலையில் கூட ஆர் எஸ் எஸ் அமைப்பின் தலைமை மற்றும்



ராகுல் காந்தி தலைமையில் ஆன காங்கிரஸ் கட்சி தற்போது ஓரளவுக்கேனும் வளர்ச்சி அடைந்து வருவதை நல்ல முன்னேற்றமாக அரசியல் வியூகம் வகுப்பாளர்கள் கணித்து வருகின்றனர். ராகுல் காந்தியை இந்து தேசியத்தின் வெளிப்படையான எதிரியாகவே இந்திய முஸ்லிம்கள் மட்டும் ஒடுக்கப்பட்ட மக்கள் பார்க்கிறார்கள். ஏனெனில் , இந்திய முஸ்லிம்கள் குறிப்பாக வட இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் கடந்த 10 ஆண்டுகளில் மிகுந்த துயரத்தை சந்தித்து வருவதை நாம் காணலாம்.

குறிப்பாக , மோடி தலைமையிலான இந்து தேசிய கட்சியின் அரசின் மீதான வெறுப்பு பல்வேறு தரப்பிலும் அதிகரித்து வருவதை நாம் காண முடிகிறது. மோடி தலைமையிலான மத்திய அரசின் கொள்கை , வேலையின்மை, விலைவாசி உயர்வு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு, ஏற்றுமதி குறைந்து, இறக்குமதி அதிகரித்து வருவது போன்ற செயல்பாடுகள் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா ஆட்சிக்கு எதிரான மன நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகி உள்ளது . இதனை வருகின்ற 2024 ம் ஆண்டு தேர்தலில் எதிர்க் கட்சியினர் ஒருங்கிணைந்து எப்படி கையாளப் போகிறார்கள் என்கிற கேள்விக்கு பதிலை நாம் தற்போது சொல்லி விட முடியாது. அதற்கான தகுந்த தருணமாக இது தீர்மானம் செய்ய வேண்டிய பொறுப்பில் இந்திய சாமானிய மட்டுமே உள்ளது என்பதை தான் நாம் இந்த தருணத்தில் நினைவில் வைத்து கொள்ள வேண்டும் என்பதை தவிர வேறொன்றும் இல்லை என்பதே உண்மையாகும்....!

தற்போதைய நிலையில் மீண்டும் ஒரு தேசிய தேர்தலை வரும் 2024 ம் ஆண்டு சந்திக்க காத்திருக்கிறது. இந்த தேர்தல் கடந்த தசாப்தங்களில் நடந்த தேர்தல்களை விட மிகவும் வேறுபட்ட தேர்தலாக தேர்தல் வியூக வாகுப்பாளர்களால் கணிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், மோடி தலைமையிலான இந்து தேசிய சனாதன அரசியல் கட்சி மீண்டும் ஒரு முறை ஆட்சிக்கு வரும் சூழ்நிலையில் ஒட்டு மொத்த தேசமும் மாறி விட தகுதியான தலைவரே இல்லை என்கிற நிலையில் மீண்டும் இந்து தேசிய சனாதன கட்சி ஆட்சிக்கு வருவதை தடுத்து நிறுத்தும் சக்தியாகவும் இவர்கள் மாறி வருவதை நாம் காணலாம். இருப்பினும் , இன்னும் 2024 ம் ஆண்டு ஒருங்கிணைந்த தேசிய தேர்தலுக்கு மிகவும் குறைவான காலமே இருக்கும் நிலையில் இவர்கள் அனைவரும் இணைந்து போட்டியிட்டு வெற்றி பெறுவது சாத்தியமான ஒன்று என்கிற பார்வையும் நாம் முற்றிலும் புறந்தள்ளி விட முடியாத உண்மையாகும்.ஆனாலும் , ஒருங்கிணைந்த எதிரக் கட்சியினரை முன்னெடுத்து செல்லுகிற பணியில் காங்கிரஸ் கட்சி ஈடுபட்டு வருவதைக் தடைகளையும் தாண்டி வர வேண்டிய கடுமையான சூழ்நிலை இருப்பதை நாம் கவனிக்க முடிகிறது. ஏனெனில் , மாறுபட்ட கொள்கையை ஏற்றுக் கொண்ட அனைத்து அரசியல் கட்சிகளும் விட்டுக் கொடுத்து, இடங்களை முறைப்படி பங்கீடு செய்து சமாதானமாக பயணிப்பார்களா என்கிற கேள்வியும் எழுகிறது . ஏனெனில் , வருகின்ற 2024 ம் ஆண்டு நடைபெறும் தேசிய அளவிலான தேர்தலுக்கு முன்பாக 5 இந்திய மாநிலங்களில் தேர்தல்கள் நடைபெற உள்ளது.இதனை அரசியல் அவதானிகள் மினி நாடாளுமன்ற தேர்தலாக உற்று நோக்கி வருகின்றனர். இந்த தேர்தல் முடிவுகள் நிச்சயமாக பாரதிய ஜனதா கட்சிக்கு ஓரளவுக்கு பின்னடைவை ஏற்படுத்தும் பாரதிய ஜனதா கட்சி இஸ்ரேலுக்கு வெளிப்படையாகவே அவர்கள் ஆதரவு தெரிவித்து இருப்பதும் சர்ச்சைசையாகி இருப்பதை நாம் கவனிக்க வேண்டும். கடந்த 42 ஆண்டுகளாக இஸ்ரேல் என்கிற ஒரு தேசத்தை அங்கீகாரம் செய்ய மறுத்த நிலையில் தற்போது இந்து தேசிய கட்சியான பாரதீய ஜனதா கட்சியின் நிலைப்பாடு பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எல்லா வகையிலும் முஸ்லிம்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதன் விளைவாகவே பாரதீய ஜனதா கட்சி இஸ்ரேலுக்கு வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்து இருப்பதை இந்தியாவில் உள்ள பல் வேறு தரப்பினர் வெளிப்படையாகவே கண்டித்து வருவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

# ஊடகவியலாளர் அஷ்ரப் ஏ. சமதுக்கு ஆங்கில உயர் டிப்ளோமா

(ஐ.ஏ. காதிர் கான்)

இலங்கையில் வெளியாகும் தமிழ் பத்திரிகைகள் மற்றும் ஐ.ரீ.என். – வசந்தம் தொலைக்காட்சி சேவை ஆகியவற்றின் கொழும்பு பிராந்திய செய்தியாளரான ஊடகவியலாளர் அஷ்ரப் ஏ. சமத், ஆங்கில மொழி மூலம் மூன்று வருட பயிற்சி நெறியான உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா செயலாளர் பயிற்சி நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தமைக்காக, ஆங்கில உயர் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்.

கல்வியமைச்சின் கீழ் உள்ள (சிலியட்) ஸ்ரீலங்கா உயர் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனத்தில், நாடளாவிய ரீதியிலுள்ள 15 மாவட்ட கல்வி நிறுவனங்களில் உயர் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி



செய்தவர்களுக்கு, 18 ஆவது முறையாக உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கும் டிப்ளோமா பட்டமளிப்பு விழாவின்போதே, ஊடகவியலாளர் அஷ்ரப் ஏ. சமத் இச்சான்றிதழைப் பெற்றுக்கொண்டார்.

# உப தபால் நிலையத்தை திறக்குமாறு போராட்டம்



(மாதம்பை எச்.எம். நவாஸ்)

மாதம்பை பழைய நகரத்தில் சுமார் 100 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த உப தபால் நிலையம் ஒரு வருடத்திற்கு மேலாக மூடப்பட்டுள்ளது. 75 வயதுக்கு மேற்பட்டவர்களின் மாதாந்த கொடுப்பனவுகள், முத்திரை, தபால் கடிதம் அனுப்புவதற்கு 2 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள புதிய நகரத்திற்கு 400 ரூபா முச்சக்கர வண்டிக்கு செலவு செய்து இந்த விடயங்களை நிறைவேற்ற வேண்டும். அரசியல் வாதிகளுக்கும், தபால் அதிபருக்கும் இந்த விடயத்தை பல முறை அறிவித்தும் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ள வில்லை. ஊர் மக்கள் அனைவரும் இதை திறந்து தருமாறு பள்ளியின் பிரதான வீதிக்கு முன்பாக இறங்கி ஒரு நாள் கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அரசியல் வாதிகளினதும், உயர் அதிகாரிகளினதும் கவனத்திற்கு கொண்டு சென்று தபால் நிலையத்தை திறந்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



அப்ரித் வஸீர்

# இலங்கை பாகிஸ்தானுக்கு கனவாகும் அரையிறுதி

13 வது உலகக்கிண்ணத்தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது. மொத்தம் 48 போட்டிகளில் 28 போட்டிகள் நடைபெற்று முடிவடைந்துள்ளன.

வெற்றி தோல்விகளின் அடிப்படையில் அட்டவணையில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளது.

தொடர் தோல்விகளை தொடர்ந்து இலங்கை அணியின் நம்பிக்கையுடன் கூடிய போராட்டம், துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சிலும், களத்தடுப்பிலும் வெளிப்படுத்திய திறமை ஆகியன நடப்பு சாம்பியனுக்கு எதிராக மிகப்பெரிய வெற்றியைப் பெற்று புள்ளிப்பட்டியலில் முன்னேற வாய்ப்பளித்துள்ளது.

பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நடந்த உலகக்கோப்பை லீக் ஆட்டத்தில், நடப்பு சாம்பியன் இங்கிலாந்து அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அணி தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 33.2 ஓவர்களில் 156 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. 157 ஓட்டங்கள் என்னும் எளிய இலக்கைத் துரத்திய இலங்கை அணி, 25.4 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 160 ஓட்டங்கள் 148 பந்துகள் மீதமிருக்கும் நிலையில் 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்றி பெற்றது.உலகக்கோப்பையில் இங்கிலாந்து அணியைத் தொடர்ந்து 5வது முறையாக இலங்கை அணி தோற்கடித்துள்ளது. இந்த உலகக்கோப்பைத் தொடரில் இங்கிலாந்து அணி தொடர்ந்து 3வது தோல்வியைச் சந்தித்துள்ளது.

பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் இதுவரை ஒரு அணி பெற்ற மிகக் குறைந்தபட்ச ஓட்டங்களாகவே இங்கிலாந்து பெற்றதாக அமைந்துள்ளது. 1999ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய அணி 168 ஓட்டங்கள் பெற்றது தான் குறைந்தபட்சமாகும். அதன் பின், 24 ஆண்டுகளுக்குப் பின் இங்கிலாந்து குறைந்தபட்ச ஓட்டங்களை பதிவு செய்திருக்கிறது.

இந்த வெற்றியால் இலங்கை அணி 5 போட்டிகளில் 2 வெற்றி, 3 தோல்விகள் என 4 புள்ளிகளுடன் 5வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இங்கிலாந்து அணியை அதிக பந்துகள் வித்தியாசத்தில் வீழ்த்தியதால், இலங்கையின் நிகர ரன்ரேட்டிலும் முன்னேற்றம் ஏற்பட்டு மைனஸ் 0.205 ஆகக் குறைந்துவிட்டது. அடுத்த இரு போட்டிகளில் இலங்கை அணி வென்றால், புள்ளிப்பட்டியலில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படலாம்.

அதேநேரம் இலங்கை அணி அடுத்து வரும் 4 ஆட்டங்களிலும் வென்றால் அரையிறுதிக்குச் செல்லவும் வாய்ப்புள்ளது.

வெற்றிக்குப் பின் இலங்கை அணியின் தலைவர்
குஷால் மெண்டிஸ் கூறுகையில், “நிகர ரன்ரேட் உயர்ந்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. முதல் சில ஓவர்கள் நாங்கள் சிறப்பாக பந்து வீசினோம். அதையே தொடர்ந்தோம்.ஒவ்வொருவரும் சிறப்பாக விளையாடினார்கள்.இன்னும் எங்களுக்கு 4 போட்டிகள் மீதமுள்ளன, அடுத்து வரும் போட்டிகளிலும் இதேபோன்று ஆட்டத்தை வெளிப்படுத்துவோம், அரையிறுதிக்குள் செல்ல முயல்வோம்.”

”குமாரா அவரின் பங்கு என்ன என்பது தெரிந்து செயல்பட்டார். எங்களின் பந்துவீச்சு இன்று கட்டுக்கோப்பாக இருந்தது. மாத்யூஸ் அனுபவசாலி, அவரின் உதவி நடுப்பகுதியில் முக்கியமாக இருந்தது. ஃ பீல்டிங்கும் சிறப்பாக இருந்தது, அடுத்தடுத்த போட்டிகளிலும் இதுவே தொடர வேண்டும் என்று விரும்புகிறோம்,” எனத் தெரிவித்தார்

இங்கிலாந்து அணி 5 போட்டிகளில் ஒரு வெற்றி, 4 தோல்விகளுடன், 9வது இடத்துக்கு சரிந்துவிட்டது.

இங்கிலாந்துக்கு இனிமேல் 4 போட்டிகள் மட்டுமே இருக்கும் நிலையில் அனைத்து ஆட்டங்களிலும் பெரிய ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று ரன்ரேட்டை உயர்த்தினாலும் அரையிறுதி வாய்ப்பு கிடைக்காது.அவ்வாறு 10 புள்ளிகள் பெற்று அரையிறுதி வாய்ப்பு கிடைப்பது மற்ற அணிகளின் முடிவைப் பொறுத்து இருக்கிறது. ஏறக்குறைய இங்கிலாந்தின் அரையிறுதி கனவு கலைந்துவிட்டது எனலாம்.இதுவரை 5 போட்டிகளில் இங்கிலாந்து பங்கேற்று அனைத்து போட்டிகளிலும் அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்த ஒரே அணியாக தனித்து நிற்கிறது.

தோல்வி குறித்து இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோஸ் பட்லர் கூறுகையில், “இந்த உலகக்கோப்பைத் தொடர் கடினமாகவும், மிகுந்த வேதனை அளிப்பதாகவும் இருக்கிறது. எனக்கு தனிப்பட்ட முறையில் மன உளைச்சலையும், வீரர்கள் அனைவரும் தங்களால் பங்களிப்பை அளிக்க முடியாத நிலையிலும் உள்ளனர்.

ஏன் இப்படி எங்களுக்கு நடக்கிறது என்பது குறித்து தெளிவான காரணம் புரியவில்லை, பதில் இல்லை. நிச்சயமாக எங்களன் முயற்சியில் எந்தத் தவறும் இல்லை, நீண்டகாலமாக இடைவிடாமல் கிரிக்கெடை சிறப்பாக ஆடி வருகிறோம்.



தலைவர் சிறப்பாக ஆட வேண்டும், முன்னோக்கி அணியை எடுத்துச் செல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். நம்பிக்கை வற்றிக்கொண்டே வருகிறது. எங்களிடம் அனுபவம் வாய்ந்த நம்பிக்கை மிகுந்த வீரர்கள் இருக்கிறார்கள். ஒருநாள் இரவில் மோசமான வீரராக மாறிவிட முடியாது, மோசமான அணியாக மாறிவிடவும் முடியாது.மிகப்பெரிய மனச்சோர்வில் சிக்கியிருக்கிறோம் என்று நினைக்கிறேன், இந்தத் தோல்விக்கு யாரையும் விரல்நீட்டி குற்றம் கூற முடியாது. வீரர்கள் தேர்வு இந்த நேரத்தில் பிரச்னையில்லை, திறமையும் செயல்பாடும்தான் தேவை. நாங்கள் அடிப்படையான விஷயங்களை சரியாகச் செய்யவில்லை என்று நினைக்கிறேன். அடுத்துவரும் போட்டிகளில் என்ன நடந்தாலும், எங்களை முன்னோக்கிக் கொண்டு செல்ல விளையாடுவோம்,” எனத் தெரிவித்தார்.




**சரிந்த பாகிஸ்தான்!**

புள்ளிப் பட்டியலில் இலங்கை அணி 5வது இடத்துக்கு நகர்ந்துவிட்டதால், 5வது இடத்தில் இருந்த பாகிஸ்தான் 6வது இடத்துக்குச் சரிந்துள்ளது. தென்னாபிரிக்காவுடனான போட்டியில் பாகிஸ்தான் கடும் போராட்டத்துக்கு மத்தியில் தோல்வியடைந்தது.இதனால் பாகிஸ்தானின் அரையிறுதிக்கனவு பறிபோயுள்ளது.மீதமுள்ள மூன்று போட்டிகளிலும் பாகிஸ்தான் வெற்றி பெற்றாலும்,அடுத்த அணிகளின் தோல்விகளிலே பாகிஸ்தானின் அரையிறுதி கனவு தங்கியுள்ளது.

கிரிக்கெட்டில் இறுதிவரை எதனையும் முடிவு செய்ய முடியாது என்பதே நிதர்சனம்.

தென்னாப்பிரிக்கா அணியிடம் தோல்வியடைந்திருந்தாலும், வெற்றிக்காக கடைசி வரை கடுமையாக போராடியது மகிழ்ச்சியளிக்கிறது என்று பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாம் கூறியுள்ளார். தொடர்ந்து பேசிய அவர், ”நூலிழையில் வெற்றியை தவறவிட்டுவிட்டோம். இந்த தோல்வி மிகவும் ஏமாற்றத்தை கொடுத்துள்ளது. ஆனால், அது குறித்து கவலை இல்லை. விளையாட்டில் இது போன்று நடப்பது இயல்பு தான்“ என்றார்.

எங்களால் சிறப்பாக போட்டியை முடிக்க முடியவில்லை. ஒட்டுமொத்த அணிக்கும் இந்த தோல்வி ஏமாற்றத்தை அளித்துள்ளது. நிச்சயம் சிறந்த போராட்டத்தை களத்தில் வெளிப்படுத்தினோம். ஆனால் துடுப்பாட்டத்தில் நிச்சயம் 10 முதல் 15 ஓட்டங்கள் வரை குறைவாக எடுத்தோம். வேகப்பந்துவீச்சாளர்களும், சுழற்பந்துவீச்சாளர்களும் பந்து வீச்சின் போது சிறப்பாக போராடினார்கள். வெற்றியும், தோல்வியும் விளையாட்டின் ஒரு அங்கம் தான். அதேபோல் டிஆர்டிஸ் ரிவ்யூவும் போட்டியின் ஒரு அங்கம் தான். ஒருவேளை கடைசி விக்கெட்டுக்கு நடுவர் அவுட் கொடுத்திருந்தால், முடிவு எங்களுக்கு சாதகமாக இருந்திருக்கும். இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வாய்ப்பு கிடைத்தும், கடைசியில் தவறவிட்டுள்ளோம். அடுத்த 3 போட்டிகளில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிபெற முயற்சிப்போம். அதன்பின் தான் மற்ற அணிகளின் வெற்றி, தோல்வியைப் பொறுத்து அரையிறுதி வாய்ப்பு அமையும் என்று தெரிவித்துள்ளார்.

**பொன்விழா....**
**முன்பக்கத் தொடர்ச்சி**

கொழும்பு 7ல் உள்ள விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் சம்மேளனத்தின் தலைவர் லுக்மான் சஹாப்தீன் அடுத்த ஆண்டுக்கான தலைவர் ஷாம் நவாஸ் ஆகியோர்கள் தலைமைகளில் நடைபெற்றது.

இம் மாநாட்டுக்கு எதிர்கட்சித் தலைவர் சார்பில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமசிங்க,, இந்திய லோக சபையின் தமிழ் நாடு பாராளுமன்ற உறுப்பிணர் கே.நவாஸ் கனி, பலஸ்தீன் நாட்டின் இலங்கைகான துாவர் கலாநிதி சுகையிர் ஹம்துல்லாஹ் செய்யட் ஆகியோர்களும் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள ஈரான் நாட்டின் தூதுவருமான எம்.எம். சுகைர் இங்கு சிறப்புரை நிகழத்தினார்.

பொன் விழா மாநாட்டை முன்னிட்டு தபால்





திணைக்களத்தினால் 25 ருபா முத்திரையும் ஞாபகார்த்த தபால் உரையும் வெளியீட்டு வைக்கப்பபட்டன தபால்உரையின் முதற்பிரதி ஸதாபகத்தலைவர் காலம் சென்ற சபாநாயகர் பாக்கீர்மாக்கார் அவர்களின் புதல்வரும் முன்னாள் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்காரிடம் தபால் மா அதிபரினால் கையளிக்கப்பட்டது.

மேலும் முஸ்லிம் லீக் வாலிப முன்னணியினால் தெரிபு செய்யப்பட்ட , ஜனாதிபதி சட்டத்தரனி எம்.எம். சுகைர், ,

அத்துடன் சம்மேளனத்தின் முன்னாள் தேசியத் தலைவர்களான என்.எம். அமீன், சிரேஸ்ட சட்டத்தரனிகளான என்.எம். சஹீட், ரசிட் எம். இம்தியாஸ், அக்கரைப்பற்று எம். ஐ. உதுமாலெப்பை, கலாநிதி பி.எம். பாருக், ஆகியோறுக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் சம்பந்தமாக பொன்விழாவினை முன்னிட்டு கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டது.

அத்துடன் களுத்துரை, மன்னார். கொழும்பு பொலநருவை குருநாகால் போன்ற 10க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் அகில இலஙகை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியினால் களுத்துறை, புத்தளம், அநுராதபுரம் மாவட்டங்களில் நடாத்தப்பட்ட 150 க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளும்

க சட்டத்தரனி ரசீத் எம். இம்தியாஸ் ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட பொன் விழா மலரும் வெளியீட்டு வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மற்றும் ஏ.எச். எம்.பௌசி, அலி சாஹிர் மௌலானா,பேராசிரியர் திஸ்ஸ விதாரன, போன்ற பாராளுமன்ற உறுப்பிணர்களும். பங்களதேஷ், இந்தோனேசியா, ஈரான், லிபியா, மலேசியா போன்ற நாடுகளின் தூதுவர்களும் சமுகமளித்திருந்தனர். அத்துடன் 20 மாவட்டங்களது முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளது கிளைகளின் பிரநிதிகளும் சமுகமளித்திருந்தனர் அத்துடன் அடுத்த ஆண்டின் புதிய தலைவராக சாம் நவாஸ் தெரிபு செய்யப்பட்டுள்ளார்.